# பிருந்தாவனம்

மாத இதழ் இதழ் 24 2017 Reg No: 3997




உள்ளே.....


- மறக்க முடியாத சம்பவம்
- எனக்குப்பிடித்த பாடல்
- சித்த வைத்தியம்
- சிறுவர் ஆக்கம்
- ஆன்மீகம்
- கவிதைச்சாரல்
- குண்டு வெடிப்பு (சிறுகதை)
- கந்தபுரத்தைத் தேடி (உண்மைச் சம்பவம்)
- ஆங்கிலம் கற்போம்
- சிங்களம் கற்போம்
- நிலவுக்கு களங்கம் இல்லை (சிறுகதை)
- கவிதை சிறப்புக் கண்ணோட்டம் கவிதைகள், கவிஞர்கள், கவிஞன்
- படித்ததில் பிடித்தது
- இன்னும் பல....


சிரிப்பு! சிறப்பு!! சிந்திப்பு!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVA ELECTRONICS

## சிவா எலக்ரோனிக்ஸ்

**TV, LCD, LED, DVD Player**
**Sun Direct, Dish Tv** மற்றும் அனைத்து வகையான றிமோற்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**TV, LCD, LED, DVD Player** மற்றும் அனைத்து வகையான எலக்ரோனிக் பொருட்களும் திருத்திக் கொடுக்கப்படும்.



**No.66, and 70, 1st floor, Bus Stand Complex, Vavuniya.**

Tel : 024 4900260/ 024 4545001 E-mail : sivaelect70@gmail.com

# KIRUBA LEARNERS

Government Approved Driving Training School

## கிருபா லேணர்ஸ்

அரச அங்கீரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை




KIRUBA LEARNERS

- எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வீடியோ காட்சி மூலமான வகுப்புக்கள்.
- குறைந்த காலப்பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம்.
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்களுக்கு அசோக் லேலன்ட் பாஸ் மூலமான பயிற்சிகள்.
- மும்மொழிகளிலும் வாகனப்பயிச்சி.
- தவணைமுறைக் கட்டண வசதி.
- பகல், இரவு என விரும்பிய நேரத்திலான பயிற்சிகள்.
  இரவு நேரம் - 6.00 Pm - 9.00 Pm

வவுனியாவின் முன்னணிச் சாரதிப் பயிற்சி நிலையம்.

| | | |
|---|---|---|
| சுன்னாகம் | : | 0212242022, 0714546956 |
| நெல்லியடி | : | 0213006550, 0714546695 |
| விசுவமடு | : | 0213201515, 0714546695 |
| பூநகரி | : | 0213201818, 0714546955 |
| முழங்காவில் | : | 0213006544, 0714546955 |
| யாழ்ப்பாணம் | : | 0214923201, 0714546958 |
| கிளிநொச்சி | : | 0212285505, 0714546955 |
| சாவகச்சேரி | : | 0214923202, 0212270700 |
| வவுனியா | : | 0242227777, 0714546953 |
| மன்னார் | : | 0719887699, 0778472732 |



தலைமையகம் : இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5992


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிருந்தாவனம்

Brunthavanam | இதழ் - 24 | மாத இதழ்


**நிர்வாக இயக்குனர்.**
இதழாசிரியர்
சிவராணி

**கணினி வடிவமைப்பு,**
கூட்டுறவு அச்சகம்
புகையிரத நிலைய வீதி,
வவுனியா. 024-2227768

**அச்சுப்பதிப்பு**
வாணி கணினிப் பதிப்பகம்
வவுனியா.

**வெளியீடு**
திருமதி. சிவராணி
இல. 04, குட்செட், வவுனியா.
தொ.பே: 077-0498177
076-5634047


## சிந்தனைத் துளிகள்

### சைவ நற்சிந்தனை

இறைவா! நான் உன்னை நாளும் பொழுதும் மறவாமல் இருக்க அருள் தருவாய். என் தெய்வமே! இவ்வுலகில் உன் தயவால் உயிர்கள் அனைத்தும் அச்சமின்றி சிறப்பாக வாழவும் இப்பூலகம் செழிப்போடு வாழவும் அருள்வாயாக.

### கிறிஸ்தவ நற்சிந்தனை

ஆண்டவரே! எல்லாம் வல்ல என் தேவனே! இப்பூமியில் அவதரித்துள்ள ஒவ்வொரு ஜீவனையும் இரட்சித்தருளும். ஒவ்வொருவருடைய பாவங்களையும் போக்கியருளும். எமக்குக் கிருபையாயிரும்.

### இஸ்லாமிய நற்சிந்தனை

எல்லா மனிதர்களும் தவறு செய்பவர்களே, தவறு செய்பவர்களில் சிறந்தவர்கள் மன்னிப்புத் தேடுபவர்களே, என நபி (ஸல்) அவர்கள் கூறினார்.

அனைத்து ஆக்கங்களையும் விமர்சனங்களையும் அனுப்ப வேண்டிய முகவரி



ஆசிரியர்
"பிருந்தாவனம்" இல. 04, குட்செட், வவுனியா.



விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரிமையுடையவர்கள்

எமது சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் விமர்சனம்

## பிருந்தாவனம் ஆசிரியருக்கு வணக்கம்!

இதற்கு முன் நான் எழுதிய சிறுகதையை பிரசுரித்தமைக்கு நன்றி. இக்கதையையும் பிரசுரிக்க அனுமதி கோருகின்றேன். இக்கதையை ஒரே இதழில் பிரசுரிக்க விரும்புகின்றேன். எனினும் முடியாது என்றால் கதையின் இடையே சிவப்பு அடையாளம் ஒன்று இட்ட இடத்திலிருந்து மற்றையதை பிரசுரிக்கவும். என் முயற்சிக்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்குவதற்கு என்றென்றும் நன்றிகள்.

நன்றி...

அன்புடன்
ஜெ. றாபின், செட்டிக்குளம்.


**பிருந்தாவனம் சஞ்சிகையின் சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப்பிரதி | - ரூபா 50.00 |
| 03 மாத சந்தா | - ரூபா 150.00 |
| 06 மாத சந்தா | - ரூபா 300.00 |
| ஒரு வருட சந்தா | - ரூபா 600.00 |


**தபால் மூலம் பெறுவதற்கு**

| | |
|---|---|
| 03 மாத சந்தா | - ரூபா 325.00 |
| 06 மாத சந்தா | - ரூபா 625.00 |
| ஒரு வருட சந்தா | - ரூபா 1250.00 |

தொடர்புகளுக்கு 077-0498177, 0765634047




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறக்க முடியாத சம்பவம்

நான் என் வாழ்வில் மறக்க முடியாத மிகவும் வேதனையான விடயத்தை பிருந்தாவனம் சஞ்சிகை மூலம் பிரசுரிப்பதையிட்டு மிகவும் மன ஆறுதல் அடைகின்றேன். நான் யாழ்பாண மாவட்டத்தில் உள்ள ஒரு ஊரில் வசித்து வருகின்றேன். எனக்கு ஒரு தங்கையும் இருந்தாள். சிறு வயதிலேயே எங்கள் அம்மாவையும் அப்பாவையும் கடவுள் எங்களிடமிருந்து பிரித்துவிட்டார். நாங்கள் சித்தி வீட்டில் இருந்து தான் வளர்ந்து வந்தோம். சித்திக்கும் ஒரு பிள்ளை இருந்தாள்.

சித்தி எங்களுக்கு உணவும் உடையும் வாங்கித் தந்தாலும் உண்மையாக அவள் எங்களை அன்பு செய்யவில்லை. நாங்கள் அநாதைகள் போல வாழ்ந்து வந்தோம். எனக்கு தங்கை மீது மிகுந்த பிரியம். அவள் என்னை விட எட்டு வயது குறைந்தவள். அவளை நான் என் உயிருக்கு மேலாக நேசித்தேன். நான் கா.பொ.த சாதாரண தரம் படித்து விட்டு கா.பொ.த உயர்தரம் படிக்கும் போது தங்கையைப் பற்றிய சிந்தனையே எனக்கு மேலோங்கி நின்றது. அவளுக்கு அம்மா, அப்பா இல்லாத, குறை தெரியக் கூடாது. அவள் கவலைகள் இல்லாமல் சந்தோசமாக வாழ வேண்டுமென விரும்பினேன். நான் வேலை செய்து நிறைய பணம் சாம்பாதிக்க வேணும். தங்கச்சிக்கு அழகான உடுப்பு, நகைகள் வாங்கிக் கொடுக்க வேண்டும். என்று எனது படிப்பை இடையில் நிறுத்தி விட்டேன்.

என்னைப் பல பெண்கள் சுற்றிச் சுற்றி வந்தபோதெல்லாம் நான் ஒதுங்கிப் போனேன். நிறைய நிறைய எனது விருப்பங்களை தங்கைக்காகவே விட்டுக் கொடுத்தேன். அவள் வளர்ந்து பெரியவளானாள் அழகுச் சிலை மாதிரி இருந்த அவளை நான் அன்பாகக் கவனமாகக் கவனித்து வரும் வேளையிலே எனது வகுப்பில் ஒன்றாக படித்த நண்பன் என் வீட்டிற்கு வந்தான். அழகே இல்லாத வறுமையான அவன் என் தங்கையைக் கண்டதும் காதல் வலை வீசிவிட்டான் என்றே நினைக்கிறேன்.


இரண்டு மாதம் கூட ஆகவில்லை என்ன நடந்ததோ தங்கையைக் கடத்திக் கொண்டு போய்விட்டான். நான் தேடிப்பிடித்து அவனை அடித்தேன். என் தங்கையோ எனக்கு அவன் தான் வேணும் என்று அவனுடனே போய்விடாள். நான் அழுதேன் அவள் அலட்சியம் செய்து விட்டு அவனுடன் போய் விட்டாள். நாம் யாருக்காகவும் வாழக் கூடாது எந்த ஒரு ஆணையும் பெண்பிள்ளைகள் இருக்கும் வீடுகளிற்கு கூட்டிவரக் கூடாது என்பதை பிருந்தாவனம் சஞ்சிகை மூலமாக சமூகத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**வாசகர்**

**சாருஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழகத் தெரிந்து கொள்ளுங்கள்....

# பயணங்கள்

பயணம் என்பது உல்லாசமாகக் கழிக்கப்படுகிற நேரம். ஒரு தமாஷ், சுவையான அனுபவம். மாறுதலுக்கேங்குகிற மனது உடனே பயணம் போகத் துடிக்கிறது. விமானத்திலோ, இரயிலிலோ ஏறி அமர்ந்து விடுகிறது. ஆனால், பிரயாணம் போகிற அனைவருக்கும் அவர்கள் எதிர்பார்க்கிற நிம்மதி கிடைத்து விடுகிறதா? இல்லை என்று தான் சொல்ல வேண்டி இருக்கும். காரணம், அவர்கள் தங்களுடைய பிரயாணத்திட்டத்தை முறையாக வகுத்துக் கொள்ளத் தவறிவிடுவது தான்.

**திட்டமிடுதல்.**

நீங்கள் போகிற ஊரைப் பற்றிய தகவல்களை முன் கூட்டியே சேகரித்துக் கொள்ளுங்கள். தங்கும் இடம், சாப்பாட்டுச் செலவு, வாகன வசதி, பார்க்க வேண்டிய இடங்கள் ஆகியவற்றை பட்டியலிடுங்கள். அந்தந்த ஊரின் சீதோஷ்ண நிலையை அறிந்து அதற்கேற்ற ஆடைகளை தயார் செய்து கொள்வது நல்லது. கோடைக்காலப் பயணம் என்றால் மலை வாசஸ்தலமும், குளிர்காலப் பயணம் என்றால் கடற்கரைப்பிரதேசமும் ஏற்றது. நீங்கள் மேற்கொள்வது வெளிநாட்டுப் பயணம் என்றால் குறைந்தது 4-6 வாரங்கள் முன்னதாகவே பாஸ்போர்ட், விஸா ஏற்பாடுகளை கவனிப்பது அவசியம். போக்குவரத்து சாதனங்களில் எதைத் தேர்ந்தெடுப்பது? நீங்கள் இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டி இருக்கும். ஒன்று உங்களுடைய பர்ஸ், அடுத்தது உங்களுடைய சவுகர்யம். உங்களால் முடியும் என்றால், நீங்கள் போகிற ஊர் ஆகாயப்போக்குவரத்து வசதி உடையது என்றால் அதைவிட வேறென்ன வேண்டும். பயணம் எளிதாகவும், இனிதாகவும் அமைந்துவிடுமே.


பஸ் அல்லது இரயிலில் பயணிப்பதெனில் இடத்துக்கு முன்பதிவு செய்து கொள்வது உத்தமம், நெடுந்தூரப் பயணத்துக்கு இரயில்தான் ஏற்றது. நம்பகமான ட்ராவல் ஏஜென்சியை தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு டிக்கட் உறுதி செய்வதில் இருந்து தங்குதற்கான ஓட்டல் அறை, பார்க்க வேண்டிய இடங்களுக்கு உங்களை அழைத்துச் செல்ல வாகனம் என்று சகல வசதிகளையும் உங்களிடம் கூடுதல் தொகை எதுவும் பெறாமலே உங்களுக்கு செய்து தருவார்கள். ஓட்டல் மற்றும் ஏர்லைன்ஸ் நிறுவனங்களிடம் இருந்து அவர்களுக்குக் கமிஷன் கிடைத்துவிடும். ட்ராவல் ஏஜெண்டிடம் எந்தத் தேதியில் இடம், பயணிக்கிற காலம், உங்கடைய பட்ஜட் போன்ற விபரங்களை நீங்கள் தந்து விட்டால் போதும். வெளிநாட்டுப் பயணம் எனில் பாஸ்போர்ட், விஸா சமாச்சாரங்களையும் அவர்களே கவனித்துக் கொள்வார்கள்.

**சி. எஸ். தேவ்நாத்.**
**இன் (பழகத் தெரிந்துக் கொள்ளுங்கள் முன்னேறலாம் நூலில் இருந்து.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கதை



# குண்டு வெடிப்பு

போர்க்களமாக மாறியது புதிது போல புழுவாய் துடித்துக் கொண்டிருந்தது அப்பூமி. ஆனால் புதிது அல்ல. பல களங்களை சந்தித்திருந்தது. தொடர் பீரங்கி தாக்குதலும், வான்குண்டுகள் மழையாய் பொழியும் சந்தர்பங்களிலும், அப்பூமி படும் அவஸ்தையை அதை தாங்கும் பூமி தாய் நன்குணர்ந்திருப்பாள். பூமியை தாங்கும் அவளுக்கே அந்த நிலை என்றால் அவளை நம்பி வாழும் மக்களின் நிலை அவலநிலைதான்.

பசுமையான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் எல்லாம் இன்று ஒரு வேளை வயிற்றுப் பசிக்காக கையேந்தி நிற்கின்றனர். சொல்லும் போது கொண்டு செல்லதக்கதாக உடனே பிரிக்ககூடிய ஓர் தரப்பாளினால் ஆன ஓர் கூடாரமே அவர்கள் சொத்து.

இப்ப இராணுவம் பூனகரியை நோக்கித் தான் வருகுது, நம்ம பொடியளும் பூனகரியை விடுகிறதாய் இல்லை. எப்படியும் ரெண்டு நாளையில் பூனகரியை மையமா வெச்சுக் கொண்டு சண்டை தொடங்கத்தான் போகுது. நாம் நடுவுல இருந்து கொண்டு கடவுள கூப்பிடுற சேட்ட ஒன்றுக்கும் உதவாது. எப்படியும் நாளைக்கு நாம் வெளிக்கிடணும் இல்லண்ணா இங்கையே பங்கர் வெட்டித்தான் இருக்கணும். அதுக்கு இப்ப காலம் காணாது ஆகவே நாளைக்கு பின்னேரம் போல வெளிக்கிடுவம். இனி போகப்போற இடத்துல சாப்பாட்டுக்குச் சரியான தட்டுப்பாடு வரப்போகுதுண்ணு கேள்விப்பட்டன். ஒரு கிலோ அரிசி ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறாங்களாம். கையில காதுல கிடக்குறதுகள வித்துத்தான் சனம் கஞ்சி குடிக்குதுகளாம். அதவிட நமக்கு வேற வழி இல்லை உசுரு வேணும்ன்னா இதுதான் ஒரே வழி அதுக்கான எல்லா ஏற்பாட்டுடனும் நாளைக்கு பின்னேரம் கிளம்ப ஆயத்தமாகுங்க. என்று அந்த ஐம்பதுக்கு மேற்பட்ட கூடாராத்துக்கும் யாராலும் நியமிக்காத தலைவர் பொறுப்பை தானே ஏற்ற சிங்கப்பெருமாள் ஐயா கூறி முடித்தார். வயதுக்கு மூத்தவர் என்ற காரணத்தாலும் இதுவரை தங்களை சரியான வழி நடத்தியவர் என்பதனாலும், நல்ல அனுபவசாலி என்றதாலும், இளசுகள் தொடக்கம் பெரியவர்கள் வரை அந்த கூடாரத்தில் இருந்த அனைவரும் அதற்கு சம்மதித்தனர். அவர்களில் ஆனந்தனின் குடும்பமும் ஒன்று.

பூனகரியை பூர்விகமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் தான் ஆனந்தன் குடும்பம். அதிகம் படிக்காவிட்டாலும் அவன் தந்தை மூலம் உலக அறிவு அவனுக்கு கிடைத்தது. நன்றாக வளர்த்தார். பொய், களவு, சுத்துமாத்து, பிராடுத்தனம், குடிப்பழக்கம் என்ற எதுவுமே அவனை ஆட்கொள்ளாமல் வளர்த்திருந்தார். தந்தையும் அவற்றை கடைப்பித்ததால் அவனுக்கும் அதை பின்பற்றுவது இலகுவாயிருந்தது.

அவர் அடிக்கடி சொல்வது இதைத்தான் “நம் சமூகம் ஒரு சில நல்லவர்களால் தான் இவ்வளவு காலம் இயங்கி கொண்டிருக்கிறது. எப்படியான உயிர் போகும் நிலையிலும் அவர்கள் தங்கள் கொள்கையில் உறுதியாயிருப்பார்கள். அவ்வாறானவர்கள் குறையும் சந்தர்ப்பத்தில் உலகம் அழிவை நோக்கி பயணிக்கும்'' என்பார்.

ஆனந்தனின் வாழ்க்கை ஆரம்பத்தில் அவன் பெயர் போல் ஆனந்தமாய் தான் இருந்தது. மனைவி, இரு பிள்ளைகள் என அவன் வாழ்வில் ஆனந்த அலை வீசிக் கொண்டிருந்து. தந்தையின் மறைவிற்குப் பிறகு அவர் சொத்துகளும் அவன் பெயருக்கு வந்ததால் வயல்க்காணி, தோட்டக்காணி, வீடு என பல சொத்துக்கு அதிபதியானான். பிறகே அவன் வாழ்வில் ஆனந்த அலைகளின் சுருதி கொஞ்சம் சுருங்கத் தொடங்கியது.

அனேக மானவர்களுக்கு விடிவைக் கொடுக்கும் என எண்ணியிருந்த அந்த போர் பல கனவுகளைத் தாண்டியும் பலனிழக்க ஆரம்பித்தது. விடிவை காணாத இனம் எப்போதும் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் என்பதற்கு யாரும் உத்தரவாதமாக முடியாது. பசுமை பொங்கிய பூமி பச்சிளம் இரத்தத்தால் மேலும் வலுப்பெற்றுக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் விட்டு வெளி ஏறியவர்களில் ஆனந்தனும் அடங்குவான். உடனே திரும்பி விடலாம் என எண்ணி அதிக உடமையையும் அவன் எடுத்து செல்லவில்லை.

"என்னங்க நாம வீட்ட விட்டு வந்து ரெண்டு மாசமாகுது. ஒழுங்கான சாப்பாடும் இல்லை எத்தனை நாளுக்குத்தான் கஞ்சியையே குடிக்கிறது. நாம சரி தாங்கிப்பம் ஆனா நம்ம புள்ளைகளால ஏலாது எண்டு உங்களுக்குத் தெரியும் தானே. நாளைக்கு வெளிகிடச் சொல்லி பெருமாள் ஐயா வேற சொல்லிப் போட்டார். இங்கையே இந்தக் கெதி அங்க ஆக்கள் வேற நிறையப் பேர் இருக்காங்க எண்டு வேற கதைக்கினம். சாப்பாட்டுக்கே நிறைய செலவாகுமாம். நம்ம கொண்டுவந்த கொஞ்சமும் எப்போதோ முடிஞ்சு போச்சுது கையில வேற காசும் இல்லை காதில கிடப்பதை தவிர தன்னிடம் வேறு எதுவும் இல்லை என சொல்லாமல் சொல்லிக் காட்டினாள் ஆனந்தனின் மனைவி சாந்தினி.

அடுத்த ஊர் போனால் ஏதும் சாப்பாட்டுப் பொருள் கிடைக்கும் என இரவிரவாக யோசித்தவன் காலையிலேயே அதற்கான பயணத்தை ஆரம்பித்தான். ஆனந்தனுக்கு ஓர் கவலைதான் தன்னை இழந்து சரி தன் இரு பிள்ளைகளையும் எப்படியாவது காப்பாத்திப் போடணும். அதுகள எப்படியும் முகாமுக்குச் சரி அனுப்பிடணும். இப்படித்தான் அவன் கனவு. இனி அவனிடம் ஒன்றுமில்லை என்றாலும் அவர்கள் விருப்பப்படி சரி இவ் வாழ்க்கையை வாழட்டுமே என ஓர் முடிவுக்கு வந்தவன் வீதிவழியே ஏதேனும் கிடைக்குமா என நோட்டமிட்டு நடந்தான்.

பல யுகங்கள் பசுமையாக வாழ்ந்த அவர்கள் தற்போதைய நிலை ஆனந்தனை அதிர்ச்சியடையச் செய்தது. எவ்வளவு சனம் நடமாடிய வீதிகளும் பக்தர்களால் நிறைந்திருந்த கோயில்களும், கலகலப்பாக காணப்பட்ட ஒவ்வொரு வீடுகளும் தற்போது யாருமற்ற அனாதை போல் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தது.


ஓர் வீடு ஆனந்தனின் கண்ணில் பட்டது. இரவுதான் செல்விழுந்திருக்க வேண்டும். வீட்டின் ஒரு பகுதி எரிந்து பின் புகைந்து கொண்டிருந்தது. வசதியான ஒருவரின் வீடு போல் அவனுக்கு தோன்றியதால் ஏதும் கிடைக்கும் என அறிந்தவன் உள் நுளைந்தான். ஏதும் உணவுப் பண்டம் உண்டா என அங்குமிங்கும் தேடினான். ஓர் அறைக்குள் அளவுக்கதிகமான உணவுப் பொருட்கள் காணப்பட்டன. ஓர் பெரிய மளிகை கடையின் களஞ்சிய அறை என ஆனந்தனின் அறிவுக்குப் பட்டது. ஆரம்பத்தில் அதிகமாக யோசித்தான். பிறர் பொருள்களை எப்படி அனுமதி இன்றி எடுப்பது யாருக்கும் பயன்படாமல் அழியப்போகின்ற பொருள்கள் தானே. நாலுபேர் வயித்துப் பசியைப் போக்கச் சரி பயன்படட்டுமே, இதுவரை யாருடைய பொருளுக்கும் ஆசைபட்டது இல்லை. அவசர தேவை எனினும் அனுமதியுடன் தான் தொடுவான். அவ்வாறு தான் வளர்க்கப்பட்டான். அவன் தந்தையின் அறிவுரைகள் மீண்டும் மீண்டும் அவன் மனதில் எதிர் ஒலித்து கொண்டிருந்தது.

தன் தந்தையும் இவ் நிலையில் இருந்திருந்தால் அவர் அனுமதித்திருப்பார் என பொய்க் கணக்கால் தன்னை அமைதிப் படுத்தினான். ஒரு பையை எடுத்து தன்னால் சுமக்கக் கூடிய அளவு உணவுப் பொருட்களை உள்ளிட்டான் இதற்கு மேல் அவனால் சுமக்க இயலாது இதனை இரண்டு கிழமை தான் சமாளிக்கலாம் என அறிந்தவன் வேறு ஏதும் கிடைக்குமா என நோட்டமிட்டு ஓர் அறைக்குள் நுளைந்தான்.

அவ்வறையில் ஓர் பக்கச்சுவர் செல் தாக்குதலால் இடிந்து விழுந்திருந்தது அதற்கு மேல் கூரையும் சாய்ந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தவன் ஓர் முனங்கல் சத்தம் கேட்டு ஒரு கணம் அதிர்ந்து போனான்.

நன்றாகக் கூர்ந்து கேட்டான். அந்த கூரைக்குள் இருந்துதான் சத்தம் வந்தது போலிருந்தது மரக்கம்பை அகற்றியவன் நன்கு உற்றுப் பார்த்தான். ஓர் பெண் இடிபாங்கருக்குள் சிக்கியிருந்தாள். விரைந்து சென்று அவளுக்கு உதவும் நோக்கில் அவ்விடத்தை ஆயத்தப்படுத்தினான். ஓர் பெரிய சுவர் அவள் மீது விழுந்திருந்தது.

தொடரும்..



ஜெ.றாமின், செட்டிக்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குப் பிடித்த பாடல்



பாடம் : மாயி

இசை அமைப்பாள் : எஸ்.ஏ.ராஜ்குமார்

இயக்குனர் : சூரியபாஸ்கர்

ஆண்டு : 2000

ஆ... ஆ... ஆஆ... ஆராரிரோ ஆரிராரோ ஆராரிரோ

சூரியனே கண்ணைப் படைச்சிட்டா சூரியனே
தூரத்திலே ஏங்கித்தவிக்குது தாய்மனமே
கள்ளமில்லாத பிள்ளை நிலா அன்னையைத் தேடுது
சுத்தமில்லாத பெத்தமனம் சோகத்தில் வாடுது...
(சூரியனே...)

விசமும் தாயின் கைபட அமிர்தம் ஆகுமே
உன் தாயின் பாலில் விசமடா என்ன செய்யுவேன்
அள்ளி எடுக்க ஆசை தான் தீண்ட விதியில்லையே
முத்தம் கொடுக்க ஆசை தான் யோகம் எனக்கில்லையே
நெஞ்சில தீயும் கண்ணில நீரும் அன்னை பெற்ற வரமோ?
(சூரியனே...)

ஆ... ஆ... ஆஆ... ஆராரிரோ ஆரிராரோ ஆராரிரோ

ஊருக்காக நதியுண்டு நதிக்கு காலில்லை
ஊருக்காக காற்றுண்டு காற்றுக்கு தாயில்லை
மேகம் மழையாய் இறங்கிட்டால் மேகம் இருப்பதில்லை
என்னுயிர் ஆக கண்மணி வாழ்க உன்னில்
கரைஞ்சிருப்பேன்.

(சூரியனே...)

**உலகத்தில் தாய், அன்பு இல்லாமல் வேறு அன்பு இல்லை எனவே பெற்ற பிள்ளைக்காக ஏங்கும் மனம் இங்கு காணப்படுகிறது இந்த பாடலை எனக்காக இல்லாவிட்டிலும் பிருந்தாவனம் ஆசிரியருக்காக போடும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.**


**த.நிரஞ்சலா**
**பனங்கட்டுகொட்டுக்கிழக்கு, மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிப்படி பயணம்

சென்ற மாத தொடர்ச்சி



## ரசிக்கலாம் வாங்க.....

கேள்வியாளர் கேட்டார் :
"அந்த விதி எபபோது நிர்ணயிக்கப்படுகிறது? எங்கிருந்து தொடங்குகிறது?"

ஞானியார் சொன்னார் :
"சூனியத்தில் நிர்ணயிக்கப்படுகிறது ஜனனத்தில் தொடங்குகிறது. தான் நினைத்தபடியெல்லாம் வாழ்க்கையை நடத்தி முடித்தவர்கள் எத்தனை பேர்? வீரன் வெற்றியுற்றால், அது வீரத்தால் வந்தது. கோழை தோல்வியுற்றால், அது கோழைத் தனத்தால் கிடைத்தது. ஆனால் வீரன் தோல்வியுற்றாலோ, கோழை வெற்றி பெற்றாலோ, அவை விதியால் நிர்ணயிக்கபட்டவை! வரலாற்று நதியைத் தனி மனிதனின் சாகசங்கள் இழுத்துச் செல்வதில்லை.

விதியே அழைத்துச் சென்றிருக்கிறது. கோவலனை மதுரைக்கு அழைத்ததும், பொற்கொல்லனைச் சந்திக்க வைத்ததும் விதி. மாதர்களாலேயே ஆரம்பமான பிரஞ்சு சாம்ராஜ்யம், மாதர்களாலேயே அழிவுற்றதற்குக் காரணம் விதி! ஒன்று நடைபெற்ற பின்னால் 'கொஞ்சம் அப்படிச் செய்திருந்தால் நடந்திருக்காதே' என்று மதி சிந்திக்கிறது!

மதி ஏன் தாமதமாகச் சிந்திக்கிறது?
விதி முந்திக்கொண்டு விட்டது!'
கேள்வியாளர் கேட்டார்:
"அப்படியானால் மனிதனின் மதியால் ஆகக் கூடியது ஒன்றுமே இல்லையா?"

ஞானியார் சொன்னார் :
பள்ளம் என்று தெரியும் போது, அதில் விழாதே என்று எச்சரிப்பது மதி. அதை பள்ளம் என்று தெரிய வைத்தது விதி. விதி வாசலைத் திறந்து கொடுத்தால் மதி மாளிகைக்குள்ளே நுழைகிறது. விதி வாசலை மூடிவிட்டால், மதி அதிலே மோதிக் கொண்டு வேதனை அடைகிறது. விதியென்னும் மூலத்திலிருந்து முளைத்த கிளையே மதி. தந்தையைக் கொன்று சாம்ராஜ்யத்தைக் கைப் பற்றிய இளவரசர்களைப் போல் மதி சில நேரம் விதியை வென்றிருக்கலாம்.

ஆனால் விதி அந்த மதியின் குழந்தையாக மறுபடியும் பிறந்து தந்தையைக் கொன்று விடுகிறது. நியமிக்கப்பட்ட தர்மங்கள் சலனமடைவதும், நியமிக்கப்படாதவை உறுதி பெறுவதும், நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியினாலே.

அதை என்ன பெயர் வைத்து அழைத்தாலும், அதுதான் நம்மை அழைத்துச் செல்கிறது. சாமியாக இருந்தவன் யோகியாக மாறுவது அனுபவத்தால் வந்த மதி. யோகி சாமியாக மாறுவது அனுபவத்தால் வந்த மதி. யோகி சாமியாக மாறுவது ஆசையின் மூலம் வந்த விதி. தொடக்கம் பலவீனமானால், முடிவு பலமாகிறது. தொடக்கம் பலமானால் முடிவு பலவீனமாகிறது தொடக்கமும் முடிவும் ஒரே மாதிரி இருந்தால் விதி வேலை செய்யவில்லை என்று அர்த்தம். அப்படி யாராவது இருக்கிறார்களா?" ஞானியார் கேள்வி, கேள்வியாளரைச் சிந்திக்க வைத்தது.

கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் யோசித்தார். மண்டபத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஞானியார் அமைதியாகக் கேட்டார் : "உங்கள் மதி வேலை செய்யவில்லையா?" கேள்வியாளர் அமர்ந்தார். ஞானியார் சொன்னார்: ஜனனத்துக்கு முன்பும் மரணத்திற்குப் பின்பும், நாம் எங்கிருந்தோம், எங்கு போகிறோம் என்று தெரியும் வரை நமக்கு அப்பாற்பட்டது ஒன்று இருக்கிறது.


இடைப்பட்ட வாழ்க்கையை அது நடத்துகிறது. நான் துறவியானதும் நீங்கள் சம்சாரிகளானதும் நமது விருப்பத்தால் மட்டும் விளைந்தவை அன்று. காலை வெயிலில், நமது நிழல் நம் உயரத்தை விடப் பன்மடங்கு உயரமாக இருக்கிறது. மதியத்தில் நம்மைவிட அது கூனிக் குறுகிக் காலடிக்குள் ஒண்டிக் கொள்கிறது. மாலையில் அது மீண்டும் உயரமாகி விடுகிறது. ஆனால், நம் உருவம் என்னமோ ஒரே மாதிரி இருக்கிறது. நம் உருவமே விதி: நம் நிழலே மதி" மண்டபமே அதிரும்படி கையொலி கேட்டது. சபை கலைந்தது. கேள்வியாளர் மட்டும் வெளியே நின்று கொண்டிருந்தார். "உங்கள் கேள்வியும் என் பதிலும் விதியல்ல மதியே! மதியால் விதியை ஆராய்ச்சி செய்யலாம், ஆட்சி செய்ய முடியாது" என்றபடி ஞானியார் நடந்தார். கேள்வியாளர் பின் தொடர்ந்தார்.

முற்றும்

தருபவர் பிரியநிலா, ஓமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன அமைதிக்குச் சிறந்தவழிகள்

மனஅமைதிக்குச் சிறந்தவழிகள்
நூலிலிருந்து திருமருகல் சிங்காரவேலனார்

**சென்றமாத தொடர்ச்சி...**

ஆனந்த நடன மிட்டாராம்.

மேற்சொன்ன நிலையையும் கடந்து அதற்கு மேலும் தீவிர உணர்வைத் தோற்றுவிக்கிறது. மாணிக்கவாசகரின் பக்திப் பரவச நிலை. அந்த நிலையை கீழ்க்கண்டவாறு நமக்கு காட்சிப்படுத்திக் காண்பிக்கின்றார்.

“என்பு நைந்து உருகி நெக்கு நெக்குருகி
அன்பு என்னும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றிநாத என்று அரற்றி உரை தடுமாறி
உரோமம் சிலிர்ப்பக் கரமலர் மொட்டித்து
இருதயம் மலர, கண் களி கூர...”

மேற்கண்ட வரிகளைச் சிந்தையில் கொள்ளும் போது நமது உடலே சிலிர்கின்றது. நமது வாய்ச் சொற்கள் தடு மாறுகின்றன. இதயம் விரிந்து மலர்கின்றது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கின்றது. இந்த மாதிரி உணர்வுகள் எல்லாம் சாமானிய நிலையில் ஒரு மனிதனிடமும் தோன்றாது. ஏதாவது ஒன்று அல்லது ஒருவர் மீது முழு மனமும் ஒரு நிலைப்பாடு அதுவே ஆனந்த பரவச நிலையாகும் போதுதான் மனிதன் மேற்கண்ட அனுபவங்களுக்கு இலக்காகின்றான்.

இந்த மாதிரி மனம் ஒருமுகப்படும் நிலை முழுமையான பக்தியில் மனம் மூழ்கும்போது தான் ஏற்பட முடிகின்றது. அதனால் தான் மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்கான ஒரு சரியான சாதனமாக ஆன்மீகத்தை நமது முன்னோர் ஏற்று செயற்பட்டனர்.

## தெளிந்த மனம் வேண்டும்.

மன அமைதிக்கு, மன வலிமைக்கு ஆதார சக்தியாக விளங்குவனவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று மனத்தூய்மை.

உள்ளத்தில் போட்டி, பொறாமை, எரிச்சல், துவேஷம் போன்ற உணர்வுகள் தலைகாட்டும் போது தான் உள்ளத்தின் தூய்மை கெட்டுவிடுகிறது.

மனத்திலே தூய்மையுடையவன் யாருக்கும் எந்த சக்திக்கும் அஞ்சவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவே செய்யாது.

மனத் தூய்மையுடையவன் மனமறிந்து குற்றம் செய்யமாட்டான். பிறருக்குத் தீங்கு இழைக்க மாட்டான் மற்றவர்கள் மீது அவனுக்குத் துவேஷம் ஏற்படாது!

மனத்தூய்மையினை எளிதாகப் பெறுவதற்கு உதவுகிற சாதனமாகத் திகழ்கின்றது பக்தி மார்க்கம்.

பக்தியினால் பெறக்கூடிய மனத் தூய்மை குறித்து சுவாமி விவேகானந்தர் கூறும் கருத்துக்கள் சிந்தனைக்கு வழி வகுப்பனவாகும்.

**தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவுக்கு களங்கமில்லை

## சிறு கதை

"என்ன இன்னும் வெளிக்கிடேல்லையே நேரம் போகுது" கமலம் பத்தாவது தடவையாகச் சொல்லிவிட்டாள். சங்கருக்கச் சினம்தான் வந்தது. "உனக்கென்ன தெரியும் வீட்டுக்குள்ளை இருந்து சமைக்கிறதும் சாப்பிறதும் ரீவி பார்க்கிறதுமாயிருக்கிற உனக்கு என்னதான் தெரியும்." பதிலுக்கு கத்தியவாறு சங்கர் செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டான். கமலம் ஏற்கனவே தயார் நிலையில் வைத்திருந்த லஞ் பொக்ஸைக் கொண்டு வந்து நீட்ட அதையும் பத்திரமாக வாங்கி வைத்தபடி விரைவாக நடந்து சென்றான்.

பேருந்து நிலையம் சென்றபின்தான் தெரிந்தது அதுவும் அவ்விடத்தில் நின்ற எல்லோரும் அவனைப் பார்த்துப் பார்த்துச் சிரிக்கும் போதுதான் தெரிந்தது தான் கால் மாற்றிச் செருப்புப் போட்டு வந்த விடயம். அசடு வழிய சரியான முறையில் செருப்பை மாற்றிப் போட்டு விட்டு பேருந்திற்காய் காவல் நின்றான். குறித்த நேரத்திற்கு வராத பேருந்துச் சாரதி மீது கோபம் கோபமாக வந்தது சங்கருக்கு. இன்று புதிய பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்கின்றான் அவன் முதல் நாளே தாமதமாகிப் போனால் தலைமை ஆசிரியர் என்னைப் பற்றி என்ன நினைப்பார் என எண்ணியபடி நேரத்தைப் பார்த்தான். நேரம் 8.30ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. மீண்டும் ஒரு முறை நேரத்தைப் பார்க்கும் போதுதான் கையில் அணிந்திருந்த தங்கக் கைச்சங்கிலி காணாமல் போயிருந்தது.

அதிர்ச்சியடைந்தவன் உடலெல்லாம் வேர்த்து விறுவிறுக்க கமலத்திற்கு அழைப்பை மேற்கொண்டான். அவளின் அலைபேசி சிணுங்கிக்கொண்டே இருந்தது. ஆனால் பதில் இல்லை. பலமுறை அழைத்தான். ஈற்றில் அலைபேசி அணைத்து வைக்கப்பட்டது. அவன் மனதில் சந்தேகமும் கோபமும் சதிராடியது. கமலம் ஏன் அழைப்பிற்கு பதிலளிக்கவில்லை. பின்பு ஏன் அலைபேசியை அணைத்து வைத்தாள். இதற்குள் ஏதோ ஓர் மர்மம். உடனே ஓர் ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு தன் புதிய பாடசாலையும் மறந்து வீட்டுக்குச் சென்றான். அங்கே வீடு திறந்திருந்தது. அவன் ஆட்டோவிற்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டு கமலம் கமலம் என பலமுறை கூப்பிட்டான். சத்தத்தைக் காணவில்லை. கமலம் எங்கே போனாள்? ஒரு நாளும் தனியாக அவள் ஒரு இடமும் செல்வதில்லையே. அவன் மண்டைடையப் போட்டு பல கேள்விகள் குடைந்து கொண்டிருந்தன.

முன் விறாந்தாவில் போடப்பட்டிருந்த சோபாவில் நாடியில் கை வைத்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது அனுங்கல் முனங்கல் எங்கேயோ கேட்க காதைக்கொடுத்துதான் படுக்கை அறைக் கதவு சாத்தப்பட்டு... முனங்கல் ஒலி.. சந்தேகப்பேய் தலைவிரித்துத் தாண்டவமாட இப்படியும் நடக்குதா? எத்தனை நாளா? என்னை ஏமாற்றிவிட்டாளே பாவி துரோகி உன்னை சும்மா விடமாட்டேண்டி உன்னை வெட்டி கூறுகூறாப் போடுறேன் பாரடி எனக் கத்தியபடி ஒரு பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு அறைக்கதவைக் காலால் உதைத்தான்.

அங்கே அங்கே அவன் கண்ட காட்சி கமலம் உடையெல்லாம் களையப்பட்டு நிர்வாணமான நிலையில் முகத்திலும் உடலிலும் அங்கம் முழுவதிலும் காயங்களும் ரத்தமுமாய் உயிர்மூச்சை கையில் பிடித்தநிலையில் முனங்கிக் கொண்டிருந்தாள். "ஐயோ கமலம் உன்னை தப்பா நினைச்சிட்டனே உத்தமியே உனக்கு என்னம்மா நடந்தது? வன்புணர்ந்து கொன்றது யாரம்மா? உன்னை சந்தேகப்பட்டு வந்தனே என் சந்தோஷத்தையெல்லாம பறிச்சிட்டு போயிட்டியேம்மா. உன்னை இப்படிச் சித்திரவதை செய்தது யாராம்மா? நீ யாருக்கும் துரோகம் செய்யேல்லையே. ஏனம்மா உன்னை இப்படிச் செய்தாங்கள்? ஐயோ கமலம் என்னைத் தனியாத் தவிக்க விட்டுப் போயிற்றியேம்மா. புலம்பியவன் மூர்ச்சையாகி கீழே வீழ்ந்தான் இப்போ கமலம் என்னும் நிலவுக்குக் களங்கத்தை ஏற்படுத்திய காமுகரை அழிக்கும் வரை அவன் ஓயப்போவதில்லை ஓயாத அலைகளாக சங்கர் உலவிக்கொண்டிருந்தான்.

**பிரியநிலா**
**ஓமந்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சாரல்

### அம்மா

நான் மீண்டும் ஒரு
ஜென்மம் எடுத்தால் அம்மா
நான் செருப்பாக பிறக்க வேண்டும்
காரணம் பத்து மாதம்
என்னை சுமந்த உன்னை
நான் தேயும் வரை ........

**D.தஸ்மிகா, வ/சைவபிரகாச மகளீர் கல்லூரி**

### அம்மா

எவ்வளவு தான் ஆடம்பர
வீடு கட்டினாலும்
அம்மா உன் சேலையில் நீ
கட்டி தந்த அந்த தொட்டில் தான்
எனது ஆடம்பர மாளிகை

**சி.சிந்துஜா, வ/சைவபிரகாச மகளீர் கல்லூரி**

### உணர்வே சக்திமிக்கது

உனது அறிவே உனக்கு எதிரி
அறிவு ஆர்ப்பரிக்கும் கணங்களில்
உணர்வு அழிந்து போகும்
அறிவால் ஜாம்பவானாகலாம்
இன்பவானாக உணர்வு இணையணும்
எல்லை கடந்து உன்னை செதுக்குவது
அழகிய அறிவின் லீலை
உனது ஆசை பசிக்க உன்னை
வருத்துவது அழகிய உணர்வின் வேலை
நீ ஒரு சுயம்பு சுயமாக
இன்பங்களை இயம்பும்
மொழிவது உணர்வே அன்றி
அறிவு அல்ல
ஆள நெஞ்சகத்தாசையை நெருப்பாய்
பற்றும் உணர்வை விட்டெறிந்தால்
தோற்பாய் அன்றி அறிவென்பது
அறப் பொய்யானது அது மாறுபட்டது
மாறும் அறிவைப் போல உணர்வு மாறுமா?
மாற்றம் காணா உணர்வில் இன்பம்
காண்பவன் பாக்கியசாலி
அன்றி அறிவும் பட்டமும் பதவியும்
பகல்க்கனவு
உணர்ந்தால் உன் வாழ்வு இனிக்கும்
இன்றி கசக்கம் என்பது உத்தமம்.

**சி.சிந்துஜா, வ/சைவபிரகாச மகளீர் கல்லூரி**

### என் தோழி

நீ என்னை விட்டு பிரிந்து
செல்லும் போது
உன் பின்னால் நீ திரும்பிப்பார்
உன் நிழலாய் நான் வருவேன்
என் உயிர் தோழியே.

**S.சௌமியா, வ/சைவபிரகாச மகளீர் கல்லூரி**

### கல்வி

கல்வியில்லா வாழ்வு ஒரு இருட்டறை
அதனை ஒளியேற்றுவதோ எமது வகுப்பறை
அதற்குள் துணைபுரிவதோ எமது ஆசிரியரே
மறக்கலாமோ அதனை எமது உயிருள்ளவரை
கல்வியுள்ள உலகம் ஒரு கடலாகும்
அக் கடலில் நீந்த நாமும் தாயராவோம்

**A.பௌத்திகா, வ/சைவபிரகாச மகளீர் கல்லூரி**

### தண்டனை

தவறு செய்தேனோ இல்லையோ
தெரியவில்லை
நீதிபதி தீர்ப்பு வழங்கினார்
தண்டனை வழங்கப்பட்டது
விலங்கு மாட்டப்பட்டது
சிறைக்கைதியாக நான்
என் பக்க நியாயங்கள்
நிரூபிக்க படமுடியாத நிலையில்...

**பாவலர் பிரியநிலா, ஓமந்தை**

### அடிமை

என் அன்பின்
அடிமையாக ஆயிரம் இதயங்கள்
இருந்தாலும் என் இதயம்
அடிமையானது உன்
அன்பிற்கு மட்டுமே.

**கே.உமா, தரணிக்குளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் விடுதலை

ஆணாதிக்கச் சிறையில்
ஆயுள் கைதி
போகத்தின் படைப்பே
பெண் என்றான்
பெருந்தத்துவார்த்தன்
சாக்ரட்டீஸ்
ஆள்பவன் ஆண்
ஆளப்படுபவள் பெண்
வழி மொழிந்தான்
அரிஸ்டாடில்
பெண் என்பவளுக்கு
சர்வ மதங்களும்
சமத்துவக் கதவை சாத்தின
நகரத்தின் நுழைவாயில்
பெண் என்றது "பைபிள்"
பாலியல் வன்முறைக்காயங்கள்
சுமப்பவள் பெண்
மதுபோதை தள்ளாட்டத்தில்
கணவன் காலடியில்
மிதிபடுபவள் பெண்
பசிமயக்கத்தில் தள்ளாடும்
பிள்ளைக்குச் சோறூட்டுபவள்
பெண்.....
வணிகக்கலாச்சார
முற்றுகையில் முன்னட்டை
கவர்ச்சிப் பாவனையாக பெண்
அரைகுறை ஆடைகளில்
பூனை நடை போடும்
அலங்காரப் பதுமை யல்ல பெண்
பாலியல் சுரண்டலிலும்
அடக்குமுறை மறுத்த சமத்துவம்
சகல தளங்களிலும் சமம்
என்பதே பெண் விடுதலை.

**தமிழினியன்**

## உடையும் இரவுகள்

ஒவ்வொரு இரவுகளையும்
உடைத்துக் கொண்டிருக்கிறேன்
அவை உனக்கும் எனக்கும்
படைக்கப்படவில்லை!

சிதறுண்ட நமது திவலைகள்
நாலா திசையும் பேசுகிறது
அழுது கொண்டிருக்கும் நமது காதலை!
ஒரு வசந்த காலத்தையே வரைந்திருந்தேன்

வல்லமை சொக்கிப் போனது
நமது காதலில்
காலம் நமக்கான கருணையை
களவாடிப்போனது
அன்று நமக்கான கருணையை
களவாடிப் போனது

அன்று உன்னை வரைந்த
பாதை எங்கும் பரிதவித்தேன்
கட்டடங்களும் மரங்களும்
நம்மில் அந்நியப் பட்டிருந்தன

அன்று உனக்கும் எனக்கும்
குடைபிடித்தவை இன்று
பிரிவு மழையில் குளிக்கச் செய்தன
பிரிவு மழையின் கண்ணீர்
சாக்கடைகளைப் பிரசவித்தன
அவை வேறுபாடுகளை ஆயுதமாக்கி
குளிர்ச்சியான நமது காதலை களங்கடித்தன

சமூகத்தின் சந்தி எங்கும்
சரிந்தது நமது காதல்

சாதியாக
மதமாக
இனமாக
மொழியாக
பணமாக
வேறு ஏதோவாகவெல்லாம்.


**த.செல்வா, கிளிநொச்சி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரியான தாய்

பெற்றவர் சுமையை சுகமாக்க
பெரும் துயரோடு
தொலைதூரம் சென்றாய் - சென்றதெனில்
தொலைந்த அந்த இனிய நாட்கள்
இனி எப்பொழுது வந்திருமடி
நான்காண்டு காலம் முகம் பாராது -
இருந்தாயடி
நானோ நாட்களை எண்ணினேன் -
உன் வரவுக்காய்



நான் கல்லூரி செல்ல - உன்
கல்யாண கோலத்தை கலைத்தாயடி
என் நெஞ்சம் வலிக்கிறது
உன் நிலையால்
என் பெற்ற அன்னையை விட
பாசத்தில் மிஞ்சிவிட்டாயடி
நீ என் சகோதரி அல்ல தாயே
உன்னைப் போன்ற சகோதரி
இப் புவியில் அனைவருக்கும்
கிடைக்க வேண்டுமடி
யாருக்கும் கிடைக்காத பாக்கியம்
உன் சகோதரியாய் நான் பிறந்தது
உன்னுடன் அன்று சண்டை போட்ட
நாட்களை இன்று நினைத்தால்
கண்கள் வேர்க்கின்றன
தாயின் கருவறையில் நானிருந்தது
பத்து மாதங்களேயாயின்
உன் அரவணைப்பில் நானிருந்தது
இருபத்திநான்கு வருடங்களே
என் நெஞ்சினில் நீ உயிரோவியமாக
பதிந்து விட்டாயடி
உன்னைப் போன்ற மனம்
எவருக்குமில்லையடி - இன்று
என் எண்ணமெல்லாம் - உன்
நல்வாழ்விற்காய் ஏங்குகிறது
இனியொரு ஜென்மம் இருப்பின்
நீ என் அன்னையாய் வேண்டுமடி
என் சேவை உனக்காக
இருக்க வேண்டும்
என்றும் உன் அன்பில் திழைத்திருக்கும்
உன் தங்கை (இல்லை) பிள்ளை.



**ஆ. குகவாணி**
**வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி**
**வவுனியா.**

## மனிதம்

எம்மில் பிரியமானவர்கள்
துன்பக் கடலில் மூழ்கும் போது

நாம் அவர்மேல் சொரிகிற
அன்பின் ஆழம் வெளிக்கிளம்புகிறது

அந்த நொடிப் பொழுதில்
வாழ்வு மீதான அர்த்தமும்
உயிர்ப்படைந்து விடுகின்றன

கண்ணீரால் தன்னைத்
தானே சுத்தப்படுத்தி
தவிப்பில் தனிமையை
ஏறியத்தொடங்குகின்றன

அக்கணத்தில் தான்
தெய்வீகம் தென்றலாய் நுளைகிறது
மனிதம் மனிதமாய் பிறக்கிறது

**அன்பு**
**த. செல்வா**

## அப்பா

அவர் என்னுடன்
கொஞ்சிக்குலாவிப்
பேசியதாக எனக்கு
ஞாபகமில்லை அவருக்குத் தன்
வியர்வையைப் பொழியவே
நேரம் போதுமானதாய் இருந்தது
அதிகாலை குளிர் பனிக்குள்
தன் பணியைத் தொடங்கி
உச்சி வெயிலில் தன்
உச்சத்தலையில் கதிரவனின்
கதிர்கள் கணைகளாய் பாய
மாலை வரை மலையெனத்
திடம் கொண்டு இரவில் தன்
பாயில் உறங்கி முனகுகையில்
என் தந்தையின்
வியர்வைத் துளிகள்
என்னில் கண்ணீர்
துளியாய் வெளிப்படும்.

**பா. நிஷாந்தினிதேவி**
**வ. தே. க. கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயணம்

சென்ற மாத தொடர்ச்சி.

ரிங் போக மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியுமாய் மனம் மலர்ந்த மல்லிகா பேச தயாராக நின்றாள் சற்றேதொலைவில் நின்ற மனோகரனுக்கு போன் வர அலைபேசி எடுத்துப் பார்த்த போது புது எண். "ஹலோ நான் மனோகரன்" என்று மறுமொழி கூற மறுபக்கம் பேச்சு இல்லை. "யாருங்க" எனக் கேட்க பின்பு தயக்கமுடன் "மல்லிகா பேசுறேன். கவிஞர் அத்திப்பூ இருக்காரா? நீங்க மனோகரன்னு சொல்றீங்களே" என மனோகரன் வியப்புடன் "ஆ மல்லிகா வா? என் இனிய தோழி நான் கோயில் வாசலில் நிற்கிறேன் எங்கு இருக்கே? நான் தான் அத்திப்பூ" என்றான். "என் பேரு மனோகரன். உனக்கு சொல்லவில்லை" என்றான்.

"எங்க நிக்கிறீங்க" என "பச்சை சேர்ட் கறுப்பு பேண்ட்" என்றான் மனோகரன். "உங்க புடவை கலர் என்ன?" என அவள் சொன்னாள் "மஞ்சள் நிறம் கறுப்பு ஜம்பர்" என (ஜம்பர் திருநெல்வேலியில் ஜாக்கெட்டுக்கு பெயர்) திரும்பி பார்த்த மல்லிகாவிற்கு மனோகரன் கண்ணில்பட அழகா சிரிச்சிக்கிட்டு அருகில் வர நிமிர்ந்த மனோகரன் அத்திப்பூ கவிஞர் நளினமாக புன்னகை பூக்க முகநூல் காதலராக இருவரும் நாணம் கோலமிட பேச முற்பட ஒரு இனிய முகநூல் காதல் அரங்கேற... நமக்கென்ன வேலை இனி. பேசட்டும் பேசட்டும். பொழுது முடியும் வரை பேசலாம். யார் கண்டது ?

முற்றும்....

**ஆக்கம் ஆரா**
**இந்தியா.**

## வருட சந்தா பெறுபவர்கள் விபரம்

**01. மா.கதிர்காமராஜா (புஸ்) வாடிவீடு, வவுனியா.**

**02. றஜீவன் ஜெனிற்றா, இறம்பைக்குளம், வவுனியா.**

**03. சி.சுரேஸ்குமார், திருகோணமலை.**


**04. கணேசமூர்த்தி சுபாசினி, உதயநகர், கிளிநொச்சி.**

**05. சந்திரகுமார் கண்ணன் – தமிழ்விருட்சம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் ஆக்கங்கள்



## உலகின் மிகப்பெரிய நூலகங்கள்.

| நூலகம் | அமைந்த இடம் | நிரு.வருடம் | புத்தக அளவு |
|---|---|---|---|
| காங்கிரஸ் | வாசிங்டன்/அமெரிக்கா | 1800 | 29,000,000 |
| பிரித்தானிய நூலகம் | லண்டன்/ஐக்கிய ராச்சியம் | 1753 | 18,000,000 |
| ஹவார்ட்கேம்பிரிட்ஸ், பல்கலைக்கழகம் | அமெரிக்கா/கேம்பிறிச் | 1638 | 12,394,000 |
| அரசாங்க நூலகம் | மொஸ்கோ/ரஷ்யா | 1862 | 11,750,000 |
| பொது நூலகம் | நியூயோர்க்/அமெரிக்கா | 1848 | 11,300,000 |
| யாளி பல்கலைக்கழக நூலகம் | நிவ்ஹேஹன் அமெரிக்கா | 1701 | 9,9370,000 |
| பிபிலோடிகா அகடமி | புகாரஸ்ட்/ருமேனியா | 1867 | 9397,000 |

## உலகின் முதன் முதலில் சந்திரமண்டலத்தில் காலடி வைத்தவர்கள்.

| பெயர் | விமானம் | திகதி |
|---|---|---|
| நீல் ஆம்ஸ்ட்ராங் | அப்பலோ 11 | 1969.07.16 |
| எட்வின் ஆல்டிரீன் | அப்பலோ 11 | 1969.07.16 |
| சார்ல் கொன்ரட் | அப்பலோ 12 | 1969.11.14 |
| எலன் பின் | அப்பலோ 12 | 1969.11.14 |
| எலன் செபார்ட் | அப்பலோ 14 | 1971.01.31 |
| எட்கர் மிவேல் | அப்பலோ 14 | 1971.01.31 |
| டேவிட் ஸ்கொட் | அப்பலோ 15 | 1971.07.26 |
| ஜேம்ஸ் ஆர்வின் | அப்பலோ 15 | 1971.07.26 |
| ஜோன் யங் | அப்பலோ 16 | 1972.04.16 |
| சார்லஸ் டியுக்ஸ் | அப்பலோ 16 | 1972.04.16 |

## விடுகதைகள்.

01. வெள்ளைப் பிள்ளை கோயிலுக்குப் பூட்டு இல்லை அது என்ன?
02. மூடிய கிணற்றில் ருசிக்கும் நீர் அது என்ன?
03. மூட்டை நிறைய இருந்தாலும் ஒரு கைப்பிடி பசியாற்றும் அது என்ன?
04. பூ பூக்கும், காய் காய்க்கும் கண்ணுக்குத் தெரியாது அது என்ன?
05. தொண்டை கிழியப் பேசுவான் அவன் யார்?
06. பச்சையும் வெள்ளையும் கலந்தால் சிவப்பு அது என்ன?
07. அழகாகக் கத்தினாலும் அடுத்தவன் வீடு மேல கண்ணு அது என்ன?
08. ஊசி போட்டு நோயைக் கொடுக்கும் அது என்ன?
09. மூன்று கண் இருந்தாலும் பார்க்க முடியாது அது என்ன?
10. கறுப்பு தோலுக்குள் வெள்ளை பந்து அது என்ன?

விடை 19ம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கம்


**பெற்றோர்களே...!**

**உங்கள் குழந்தைகளின் புகைப்படங்களும் மாணவர் அரங்கம் நிகழ்ச்சியில் இடம்பெற விரும்பினால் நீங்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி.**


**ஆசிரியர், பிருந்தாவனம் இல.04, குட்செட் வீதி, வவுனியா.**



பி.யதுர்ஷன்
மா.இல: 31



பி.எவின்சியா
மா.இல: 32



ந.அனோயினி
மா.இல: 33



ந.அபிதா
மா.இல: 34

# வர்ணம் தீட்டும் போட்டி



**1வது பரிசு**

**ற.நிருபன்**
கோவில்குளம்,
வவுனியா.

**2வது பரிசு**

**மு.அகல்யா**
கோணாவில்,
கிளிநொச்சி





**3வது பரிசு**

**அ.நிருபா**
ராசேந்திரகுளம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டி பரிசு வெல்வோம்.



**தரம் 05 இற்கு உட்பட்ட மாணவர்களே இப்போட்டியில் பங்குபற்ற முடியும். சிறந்த மூன்று வர்ணங்களுக்கு பரிசு வழங்கப்படும்.**

பெயர் :........................................................................

முகவரி :........................................................................

தரம் :........................................................................

பாடசாலை :........................................................................

தொ.பே.இல :........................................................................

வகுப்பாசிரியர் ஒப்பம் :........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்த வைத்தியம்



## மாலைக் கண் குணமாக.

வல்லாரை இலையை தண்ணீரில் கழுவி ஒரு கைபிடியளவு அம்மியில் வைத்து அரைத்து எடுத்து அதில் ஒரு கொட்டப்பாக்களவு வாயில் போட்டு ஒரு டம்ளர் அளவு பசுவின் பாலைக் குடித்து விட வேண்டும். இந்த விதமாகத் தொடர்ந்து 12 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மாலைக்கண் பூரணமாகக் குணமாகும்.

## இரத்தம் சுத்தமாக

வல்லாரை, புளியாரைக்கீரை இலைகளைக் கொண்டு வந்து தனித்தனியே இடித்து ஒவ்வொன்றிலும் அரை டம்ளர் அளவு சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். வில்வமரத்தின் பட்டையைக் கொண்டு வந்து உரலில் போட்டு பசுவின் பால்விட்டு இடித்து அந்தச் சாற்றில் அரை டம்ளர் எடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் 120 கிராம் நெய்யை விட்டு எல்லாச் சாற்றையும் அதில் விட்டு நன்றாகக் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். காயும் போதே 150கிராம் பனம் கற்கண்டை தூள் செய்து போட்டு பாகுபதம் வந்தவுடன் இறக்கி ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு காலை மாலை ஒரு தேக்கரண்டியளவு சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும்.

## கண்ணோய் விலக...

கண்ணோய் என்று தெரிந்தவுடன் ஒரு சுத்தமான சிறிய போத்தலில் இரண்டு பட்டாணியளவு பளிங்குபோன்ற படிகாரத்தை உடைத்துப் போட்டு நன்றாகக் கரைத்து மூடி வைத்துக் கொள்ள வேண்டும். நோயுள்ள கண்ணைச் சுத்தம் செய்துவிட்டு இந்த மருந்தை ஒரு கண்ணுக்கு 2 துளி வீதம் விடவேண்டும். காலை, பகல், மாலையாக ஒரு நாளைக்கு மூன்று வேளை விட்டுவந்தால் கண்ணோய் குணமாகும்.

## வரட்டு இருமல் அகல.

தேக்கரண்டி அளவு எலுமிச்சம் சாற்றுடன் அதே அளவு தேன் சேர்த்து காலை, மாலையாக மூன்று நாள் சாப்பிட வரட்டு இருமல் குணமாகும்

## தாய்ப்பால் சுரக்க.

பெற்ற குழந்தைக்கு தேவையான பால் கொடுக்க முடியாத தாய்மார்கள் தரைப் பசளைக் கீரையைச் சாப்பிட்டு வந்தால் பால் சுரக்கும், குழந்தையின் வயிறு நிறையும்.

## மார்பு வலிக்கு எளிய நிவாரணம்

ஒரு சிலருக்கு அடிக்கடி மார்பில் வலி உண்டாகும். ஒரு சிலருக்கு மார்பின் உள்ளே குத்துவலி உண்டாகும் ஒரு சிலருக்கு சில மணி நேரம் மூச்சுத்திணறல் ஏற்பட்டு நிற்கும். இந்த வகையில் கஷ்டப்படுபவர்களுக்கு கீழ் கண்ட மருந்தைத் தயாரித்து கொடுத்தால் பூரண குணம் ஏற்படும். பிறகு இந்த நோய் வராது.

நன்றாகச் செழித்து உயர்ந்து வளர்ந்திருக்கும் குப்பைபேனிச் செடியின் இலைகளைப் பறித்து வந்து அவைகளைச் சுத்தம் பார்த்து வெயிலில் சருகு போல காயவைத்து எடுத்து உரலில் போட்டு இடித்து மாச்சலடையில் சலித்து ஒரு வாய் அகன்ற சீசாவில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். தினசரி இரவு படுக்கைக்கு போக ½ மணி நேரம் இருக்கும் பொழுது ஒரு டம்ளர் காச்சிய பசும்பாலில் இந்தத் தூள் ஒரு தேக்கரண்டி அளவு போட்டு கலக்கிக் கொடுத்து விட வேண்டும். தொடர்ந்து 07 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி வைத்தியம்





## ஞாபக சக்திக்கு....

இன்று படித்தவற்றை ஞாபகத்தில் வைக்க முடியவில்லையே என்பது பலரின் பிரச்சனையும் கவலையுமாகும். இதற்கு பலவழிகள் உள்ளன. தியானம் மூலம் மனதை ஒரு நிலைப்படுத்தல், வல்லாரை, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, கரட், முடக்கொத்தான், தேன் என்பன உணவில் சேர்க்க ஞாபகசக்தி விருத்தியாகும். அல்லது ஒரு பங்கு கொத்தமல்லி, அரைப்பங்கு நற்சீரகம், கால்பங்கு வேர்க்கொம்பு வறுத்து இடித்த தூளை சுடுநீரில் கலந்து தேனீர் போல் பாவிக்க அல்லது சமபங்கு கறுவாவுடன் வேர்க்கொம்பு சேர்த்து இடித்த தூளை காலை மாலை அதைத்தேக்கரண்டியளவு தேனில் சாப்பிட ஞாபகசக்தி விருத்தியாகும். அத்துடன் தேகசுகம் பிரதானம். நல்லநிலை தேகத்தில்தான் நல்ல மனநிலை வரும். நல்ல தெளிவான மனம் ஞாபக சக்திக்கு அவசியம் கற்றவற்றை எளிதாக எப்படி நினைவில் வைக்க முடியும் என்று பார்த்தால் ஒழுங்கின்றி படிப்பதை மூளை நினைவில் வைத்துக்கொள்வதில்லை.

ஒழுங்குபடுத்தி அனுப்புவதையே மூளை நினைவில் வைத்துக்கொள்ளும் இல்லையேல் மூளை சூடேறி தலையிடி ஏற்படும். இதனால் பனடோல் போன்ற மருந்துகள் பாவிக்க வேண்டிவரும். கற்பதின் தலைப்பை, உள்ளடக்கத்தை கற்றவுடன் நினைவுக்கு கொண்டுவர முயலவேண்டும். அதாவது நாம் ஒரு பாடத்தைப்படித்து அதில் உள்ள முக்கிய கருத்துக்களை பொருத்துதல், தொடையாக்கல் முறைமூலம் உள்ளத்தில் பதிய வைக்கவேண்டும். தெளிவாக மனதில் பதியவைத்தவுடன் படித்தவிடயத்தை மனதினால் நினைவுக்கு கொண்டுவர வேண்டும். எந்த விடயம் நினைவுக்கு வரவில்லையோ அதனை மீண்டும் மீண்டும் பார்த்து மனதில் பதியச்செய்ய வேண்டும். உடனே பதிவு செய்ய மனம் கணினியல்ல படித்து முடித்ததை உடனே நினைவுபடுத்திப்பார்க்க வேண்டும். பத்துமுறை படிப்பதைவிட நல்லபலன் இதனால் கிட்டும். ஒரு பொருளைப்பற்றிப்படித்தால் அதன் விபரங்களை மூளை உள்வாங்கிக்கொள்கிறது. நாம் படித்ததை உடனும் சிறிது நேர இடைவெளியின் பின்னரும் நினைத்துப்பார்க்க வேண்டும். காலையில் கற்றதை இரவிலும், இரவில் கற்றதை காலையிலும் நினவுக்குக்கொண்டு வர வேண்டும். இந்தப்பயிற்சி மூலம் கற்றவையாவும் மனதில் (உள்ளத்தில்) பசுமரத்தாணிபோல் பதிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 24

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | ■ |
| | ■ | 4 | 5 | | ■ | 6 |
| 7 | 8 | ■ | | ■ | 9 | |
| ■ | | ■ | 10 | | | ■ |
| 11 | | 12 | ■ | ■ | | 13 |
| | ■ | 14 | | | | ■ |
| 15 | | ■ | 16 | 17 | 18 | |

## இடமிருந்து வலம்

01. நீலநிறமும் மஞ்சள் நிறமும் சேர்ந்தால் பெறப்படும் நிறம்
03. படை என்றும் சொல்லலாம்
04. பிரதியுபகாரம் இவ்வாறு அழைக்கப்படும்
07. பாரம் என்பதைக் குறிக்கும்
09. காட்டு மிருகம் பாயும் குணம் கொண்டது
11. வீண் சண்டை என்றும் கூறலாம்
13. தானாகத் தோன்றுவது (திரும்பியுள்ளது ஓர் எழுத்து மறைந்துள்ளது)
14. இரவில் பார்ப்பதற்கு அழகாகத் தென்படும் ஒரு பூச்சியினம்
15. முல்லைக்கு தேர் கொடுத்த அரசன்
16. எள்ளிலிருந்து செய்யப்படும் இது
18. இராமாயணத்தில் வரும் வில்லி

## மேலிருந்து கீழ்

01. இதனை தலையணை செய்யப் பயன்படுத்துவர்
02. உடல் அசைவால் தெரிவிப்பது
03. நீரும் மண்ணும் கலந்த நிலம்
05. சிலப்பதிகாரத்தில் ஒரு முக்கிய பெண் பாத்திரம்
06. துன்பம் என்பதன் ஒத்த சொல்
08. ஆங்கிலத்தில் Center எனப்படும்
09. பொக்கிஷம் என்றும் சொல்லலாம்
11. காகம், நரி என்றதும் நினைவில் வரும்
12. பூமி
17. பருகு / அருந்து

## சென்ற மாத போட்டிக்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ல | 2 க | ம் | ☒ | 3 ஐ | ந் | 4 து |
| ம | ☒ | ர | 5 தே | கு | க் | ☒ | ணை |
| ல | ☒ | க | ☒ | 6 ன் | கி | ழ | வ |
| ம் | 7 த | ம் | ☒ | 8 கு | ய | வ | ன் |
| ☒ | வி | ☒ | 9 கோ | வ | ம் | ☒ | ☒ |
| 10 வீ | டு | 11 து | மா | ளை | ☒ | 12 ரை | 13 நா |
| ர | ☒ | 14 உ | ளி | ☒ | 15 னை | ☒ | ண |
| ம் | 16 கூ | டு | ☒ | 17 க | ப | ட | ம் |

**போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற போட்டியாளர்கள் முதலாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளஎமது தொ.பே இலக்கத்துடன் தொடர்புகொண்டு பரிசில்களை பெற்றுக்கொள்ளுங்கள்.**

குறுக்கெழுத்துப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் வெற்றியாளர்கள் முறையே போட்டி இல 22

**01வது பரிசு :**
**அ.ஜபார்ராஜா**
**மதீனாநகர், வவுனியா.**

**02வது பரிசு :**
**தி.மதியழகி**
**தரவன்கோட்டை, மன்னார்.**

**03வது பரிசு :**
**வே.வத்சலா**
**மீசாலை, சாவகச்சேரி.**

**விடைகள்.**

01. முட்டை
02. இளநீர்
03. அரிசி
04. நிலக்கடலை
05. தவளை
06. வெற்றிலை
07. குயில்
08. நுளம்பு
09. தேங்காய்
10. உளுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர்போட்டி இல. 24


(சிறுவர்களுக்கான போட்டி)

**இடமிருந்து வலம்**

01. பகைவனை இவ்வாறும் அழைக்கலாம்
03. அரசன்
05. ஆண் மான் ( திரும்பியுள்ளது)
06. இல்லை என்பதன் எதிர்ச்சொல் (திரும்பியுள்ளது)
07. திருடன் (திரும்பியுள்ளது) கடைசி எழுத்து மறைந்துள்ளது.
09. கேள்வியின் எதிர்ச்சொல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

02. வாரத்தின் இரண்டாவது நாள்
04. இவன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் (குழம்பியுள்ளது)
05. பனையிலிருந்து வடிக்கப்படும் ஒரு போதை தரும் பானம்
07. வீடு கட்டத் தேவைப்படும் பொருள்களில் ஒன்று
08. துக்கம் ஒத்த சொல் (கீழிருந்து மேல்)




## நீங்களும் வெற்றியாளர்களாக! நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்...

**மேலுள்ள புதிர்போட்டி கட்டங்களை பூர்த்தி செய்து அதனை கத்தரித்து தபாலில் ஆசிரியரின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

## இம் மாதம் புதிர் போட்டியில் வெற்றிப் பெற்ற வெற்றியாளர்கள்.

**முதலாம் இடம்**

வீ.ராகுல்
அடம்பன், மன்னார்.

**இரண்டாம் இடம்**

தெ.தேனகன்
மூன்று முறிப்பு,
வவுனியா.


**மூன்றாவது இடம்**

மா.டிலோஜினி
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடத்தில் ஒரு கேள்வி



முழுப்பெயர் :........................................................

பிறந்த திகதி :........................................................

நேரம் (காலை/மாலை) :........................................................

நட்சத்திரம் :........................................................

இராசி :........................................................

விலாசம் :........................................................

மகாதிசை இருப்பு :........................................................

வருடம் :.............................. மாதம் .............................. நாள் ..............

கேள்வி :........................................................

சோதிடத்தில் உங்கள் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் பிருந்தாவனம் சஞ்சிகையில் தரப்படும். நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் விபரத்தை கத்தரித்து அதனை நிரப்பி பிருந்தாவனம் பத்திரிகைக்கு அனுப் புங் கள்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரக நிலை | | |
| | | | |
| | | | |


**ஆழ்வாப்பிள்ளை பத்மநாதன்**

இல.321/10, தட்சநாதன்குளம்,

மன்னார் வீதி வவுனியா.

0778379141


பெயர்: சுப்பரமணியம் தயனுஜா
பிறந்த முகவரி :1991.10.07
முகவரி : வைரவபுளியங்குளம், வவுனியா.

கேள்வி : என் எதிர்காலம் எப்படி இருக்கும்? எனது கஷ்டங்கள் எப்போது தீரும்? எனக்கு நிரந்தர வேலை எப்போது கிடைக்கும்? வெளிநாடு செல்ல வாய்ப்புண்டா?

பதில் : உங்கள் எதிர்காலம் பற்றிக் கூறுமிடத்து உங்கள் வாழ்க்கையில் சில சோதனைகளை எதிர்நோக்க வேண்டிவரும். ஆனால் லக்கினாதிபன் லக்கினத்தில் ஆட்சி பெற்ற படியால் உங்களுக்கு ஆயுள் பலமும் மனவுறுதியும் ஏற்படும். கவர்ச்சியான தோற்றமும் கருணை உள்ளமும் கண்ணியமான நடைமுறையும் உள்ள உங்களை எவரும் வெறுக்கமாட்டார்கள். கல்விக்குரிய புதன் 9ம் இடத்தில் ஆட்சி உச்சம் பெற்றபடியால் கல்வி உண்டு எனக் கூறவியலாது காரணம் செவ்வாய் சேர்ந்தபடியால் கல்வி தடைப்பட ஏதுவாகும். உங்கள் கஷ்டங்கள் இப்போ தீர தடை காட்டுகிறது. ஆனால் இந்தக் கஷ்டம் நீடிக்க மாட்டாது. உங்களுக்கு எதையும் தாங்கும் இதயம் இருப்பதால் எதையும் வென்றுவிடுவீர்கள். 2018ம் ஆண்டில் ஏதோ ஓர் நிரந்தர வேலை கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பை இப்போ காட்டவில்லை. அப்படிப்போனால் இடையில் கஷ்டப்படும் நிலை ஏற்படும். உங்கள் கணவனுக்குரிய 7ம் அதிபன் 9ல் இருந்தபடியால் நல்ல கணவன் நல்ல பிள்ளைகள் தோன்றுவார். எண்ணின் படி 9 கடும் பகையாகும். எனவே எண் 9ல் பிறந்தவரை மணக்க வேண்டாம். பிற்காலம் சிறப்புடன் வாழ்வீர்கள். உங்களுக்கு எண் 2,5,7 ல் பிறந்தவர்கள் காந்தம் போல் வசியம் ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கந்தபுரத்தைத் தேடி.... ஒரு பயணம் (உண்மைச் சம்பவம்)

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஒரு வீதி எட்டாங்கட்டை தொட்டது
இன்னொரு வீதி அக்காராயன் காட்டியது
இன்னுமொன்று கந்த புரம் மீட்டியது

என்னை மட்டுமல்ல என் உணர்வையும்
மீட்டியது கந்த புரந்தான்
என் எண்ணம் மட்டுமல்ல
என் இதயமும் மீட்டியது
கந்த புரந்தான்.

ஆகவே அவள் நினைவு சுமந்தபடி
போகின்றது பயணம் மாறாத படி
இப்பெரும் சந்தியில்
சேர சோழனில் எப்போதும்
சனக் கூட்டம் தான்

இளவேனில் மதுரத்திலும் பார்க்கத்தான்
என் நண்பன் பார்த்தீபனின்
ரயர் கடையும் அருகில் தான்
நாதனின் மண் எண்ணெண்ணெய் கடையும்
நடுக் கடனில் தான்
நினைவுகள் எங்கோ செல்ல
திரும்புகிறேன் பீடா மெல்ல

இவ் வீதி முழுவதும்
கிறவல் தான்
என்னை மீறி பசியும் தழுவல் தான்

விரைகின்ற
வாகனத்தால் உயிர்களுக்கும்
உறுத்தல் தான்
விலையேற்ற வரிகளால்
வாடிக்கையாளர்களுக்கும்
வருத்தம் தான்

அடுத்தது அக்கராயன் மகா வித்தியாலயம்
அங்கேயும் அவளைப் பார்க்கின்றேன்
ஐயகோ மனம் புரியாமல் வேர்க்கின்றேன்
ஏனெனில் இன்று விடுமுறை
மனதில் காதல் தொடர்கதை
அடுத்தது அண்ணாசிலையடி
அங்கேயும் பார்க்கிறேன்

அவள் சொல்லாமல் போன காதலை
மெல்லாமல் கேட்கின்றேன்
அவள் இல்லை அவளாகவும் இல்லை
படலம் தொடர்கிறது அதற்காய்
பயணம் தொடர்கிறது
கந்தபுரத்தைக் கண்டேன்

என் காதலியைக் காணவில்லை
காண வேண்டும் தேடிக்கொண்டேன்
என் நண்பன் சங்கர் கண்டு கொண்டான்
நடு வீதியில் பம்பல் கொண்டான்
சந்தையடியில் சனம் குமிழிகள் தான்
சாக்கடையில் நீர் வடிவதும் வடிவுதான்
அப்போது அவள் போல் ஒருத்தி
தலை நிமிர்ந்து கரும்புத் தோட்ட
வீதியால் வந்து கொண்டாள்

இப்போது இவள் போல் இன்னொருத்தி
அழகினை குழப்பி மணியங்குள வீதியால்
சென்று கொண்டிருந்தாள்
என் எண்ணங்களின் விமோர்சனங்கள் தான்
இத்தனைக்கும் காரணம் என் கண்களின்
பிரமை தான் அத்தனைக்கும் தோரணம்

கந்தபுர ஒழுங்கைகள் கணக் கெடுத்தன
"வெண்ணிலா" தியட்டரும் சுளுக்கெடுத்தென
அவளைக் காணவில்லை
அதற்காய் நான் ஓயவில்லை
அப்போது கண்டேன் அவள்
நண்பி மாலினியை தெரியாதென்ற
ஒரு சொல்லோடு காதல் புரியாமல்
போனது நெஞ்சோடு

என்னை நானே மறந்த
மாற்றமா? இப்படி இல்லை
பெண் மனத்தால் என் மனம் ஏமாற்றமா?
இப்படி அங்கோ டானியல் மைதானம்
அளவெடுத்தேன் கண்களால்
அங்கேந்தேன் காதல் கிளி
பறந்து திரிகிறதா? எண்ணிப் பாத்தேன்
எண்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் இல்லை அவள்
எங்கும் இல்லை அசல்
எட்டாங்கட்டை ஏத்தம் கண்டேன்
என்னும் ஏப்பமிட்டேன்
இந்த ஒரு சுழற்சியில் என்னை நான்
மறந்திருந்தேன்

பார்ப்பவர்கள் கூட
பரிதாபப் பட்டிருக்க வேண்டும்
நான் பாதை தெருவில்
நிலை மாறியிருக்க வேண்டும்
எதிர் பாராத விபத்து
நெரிபடாது துடித்தேன்
காதல் நினைவிலும் நான் காயம்
படவில்லை காதல் நிலவிலும்
நான் பாலம் போட மறந்ததில்லை
அக்காரயனுக்குப் போய்
பார்க்க வேண்டும் என்றது நெஞ்சம்

உழக்கி அலுக்க வேண்டுமே
உள்ளூர கெஞ்சுது உள்ளம்
காதலின் தாகம் என்னை தேட வைத்தது
காதலின் போகம் என்னை நாட வைத்தது

அந்த அக்காராயன் ஆஸ்பத்திரியில்
அவளைத் தவிர மற்றவர்கள்
எல்லோரும் நின்றார்கள்
நேஸ்மார் சிலர் சிரித்தனர்
நோயாளர் சிலர் அழுதனர்.
மலேரியா தான் காரணமாம்
நுளம்புகளின் நூதனமாம்
இறந்த ஒருவரும் உலகை மறந்து கிடந்தார்
உறவினரோ அழுதழுது கண்ணீர் கடனை
கடத்தினர்

அங்கொருத்தி உற்றுப் பார்ப்பது தெரிந்தது
சந்தேகம் பிழை தான்
ஒரு வேளை சந்தேகம் புதிர் தான்
யார் என்று தெரியுமுன் அவளருகில் நான்
என் நெஞ்சினில் வேகம்
அவள் நேரினில் நான்
காச்சல் என்று காரணம் காட்டினாள்
தடுமல் என்று இருமிக் காட்டினாள்
அதுவோ என் ஏதிர் வீட்டு ஆச்சி
எனக்கோ உணர்வில்லை தலையாட்டி

ஒரு முறை அலைந்தேன்
பல முறை வாடினேன்
அது ஒரு ஆவணி வெய்யிலில் என் உடல்
ஒரு முறை திரிந்தேன்
பல முறை நனைந்தேன்
அது ஒரு மார்கழி மழையில் என் உடல்
ஒரு முறை நடந்தேன்
பல முறை ஓடினேன்
அது ஒரு இடம் பெயர்வினால் என் உடல்
ஒரு முறை பிறந்தேன் பல முறை இறந்தேன்
அது ஒரு காதலினால் காயம் என் உடல்
யுனியன் குள வீதி முழுவதும் வேலை
சோதிட உபாயக் கூட்டில் ஒரு வேளை
அவள் இங்கு வந்ததாக தெரியவில்லை
அவள் இங்கு வருவதற்கும் தெரிவு இல்லை
கந்தபுரத்தில் காதல் இருந்தது உண்மை
அந்தப்புரத்தில் ஆசை இருந்தது ஊமை
எங்கு போனாலும் மீண்டும் மீண்டும்
தூண்டுவது கந்தபுரத்து கனவு தான்.

காணவில்லை என்ற காரணத்தால்
காதல் மாறுவதில்லை
காண வேண்டும் என்ற எண்ணத்தால்
மோகம் தீரவில்லை
மீண்டும் பயணம் இறுதியாக
அந்த இறைவனிடம் சடமாக
அவள் காப்பு விரதத்திற்காய் ஒரு முறை
வந்ததாய் ஞாபகம் அடர்ந்த காற்றின்றி
ரயரும் நடு வீதியில் நாடகம்
பதினைந்து நிமிடம் பறி போனதால்
இருபது ரூபாய் இழப்பு

அவள் வரவு வந்திருந்தால்
ஒரு வேளை நிறைவு
நாதஸ்வர ஒலியில் நான் மயங்கினேன்
மேளத்து அடியில் நான் அடங்கினேன்
அங்கு கூட என் விழிகள் அவளைத் தேடி
அலைந்தன பக்தர்களின் பரவசத்தால்
மனங் கூட பரிதவித்தன.
கந்த புரத்து கவலையில் தான்
கந்தவனும் இருந்தான் போல

காத்திருந்த என்னால் தான்
கை கூப்பி தொழ முடியாமல் போக
வெளியேறினேன் விபூதி அணிந்த படி
வீதி எங்கும் அணி வகுத்தபடி
இப்பொழுது பல கடைகள் பூட்ட இருந்தன
கூட்டுறவுச் சங்கமும் இதை ஏற்க இருந்தது
என்னையே இழந்தபடி
இழந்த ஏமாற்றத்தின் படி
எங்கு போவது தெரியாது பயணம்
ஏங்கினேன் அவளைக் காணாது துயரம்

இப்போது இருளின் இராட்சியத்தில்
நிலா ஒன்று எட்டிப் பார்ப்பது தெரிந்தது
அவள் கூடப் பெண் தான் ஏறி வர
ஏணியில்லை எனக்கு
உன் கூட வர தோணியில்லை எண் கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுர அலைச்சலால்
காச்சல் கூட லேசாக ஊறியது
அந்தபுரத்து ஆசையால்
ஆண்மை கூட விதி விலக்காய் மாறியது
இரவு தேடிய நிலவாய்
இடம் பிடித்தாள் என்னை
உறவு தேடவா ஊமையாக இருந்தேன்
ஏமாற்றி விட்டாள் நெஞ்சை
கனவில் வாழ்ந்ததோடு
கற்பனை வளர்த்தேன்
காணவில்லை உன்னை
காத்திருந்து நொந்து விட்டதே
காதல் என்பது கண்ணாடிக்கிள்ளை
கந்தபுரத்தைக் காதலித்தேன்
இது உண்மையாகவில்லை

காச்சலைக் கூட சிறு தூசாக நினைத்தேன்
அது ஊமையாக வில்லை
ஆறு குளுசை போட்டு அடங்கி விட்டேன்
கனவில் கூட அவள்
நினைவா என துள்ளுகின்றேன்
என் கதையில் கூட அவள்
நிஜமா என எண்ணுகின்றேன்
உண்மைதான் அவள் என்னை முத்தமிட்டாள்
அவள் என்னை தொட்டுவிட்டாள்
அட கனவடா இதுவும் எட்டாக கனியடா?
நாட்கள் கடந்தன ஆண்டுகள் ஓடின
ஏக்கம் ஏனொ குறைந்தன
ஏமாற்றம் உள்ளே குடைந்தன

கந்தபுரத்து நாயகியை அதன் பிறகு
கனவிலும் காணவில்லை நான்
காதலித்திருந்தால் ஒரு வேளை
கதையிலும் உடைவில்லை தான்
மேகம் இல்லை என்பதற்காக வானம்
அழுவதுமில்லை காதல் தோல்வி
என்பதற்காக காலமும் தனிமையில்
வாழ்வதில்லை ஒரு தலைக்
காதல் போல இது.

உருக்குலையவுமில்லை உணர்வினில்
பைத்தியமாய் தெரு முனையில்
அலையவுமில்லை காதலியாய் வாழ்ந்தாள்
காதலியாய் இழந்தாள்
காண வேண்டும் என கண்கள்
துடித்தது உண்மை காதல்செய்ய
வேண்டுமென நெஞ்சம் நினைத்தது உண்மை

ஒரு வேளை அவளும் என்னைத்
தேடியிருந்தால் காதல் கோட்டை படத்தை
போல காட்சியில்லை எமக்குள்
காதல் என்றும் கண்ணாடி உடைந்தால்
பொருந்துவதுமில்லை.

வாழ்க்கை எனும் புத்தகத்தை பல தடவை
படித்தேன் வான் நிலா முகத்தை பல முறை
ரசித்தேன் ஒவ்வொறு எதிர்பார்ப்பும் ஏமாற்றம்
தந்தது ஒவ்வொரு உயிரோட்டமும் நினை
விழந்து இழந்தது காதல் என்பது பொய்யா
காலம் என்பது பொய்யா புரியவில்லை
எனக்குள்? காற்றிழந்த பந்த ஏக்கம்
நிறைந்த நெஞ்சா நினைவு இல்லை
இன்றும் எனக்குள்

தூங்கி விழித்த பின்பு தான்
தெரிந்து கொண்டேன்
நான் கண்டது கனவு என்று....
தூங்காமல் விழித்திருந்தேன்
இதயம் அழுதது
காதல் என்பது பகல் கனவு என்று
என் வாழ்நாளில்
மறக்க முடியாத நாளும் இது தான்
என் நாட்குறிப்பில் இறுதியாக எழுதிய
கவிதையும் இது தான்.
அன்பு வைத்த உள்ளம்
தங்காமல் போனது இனி
ஆராட்சி செய்கின்றேன் - அங்கே
யார் தேடிப் போனது

என் கண்ணில் ஈரம்
நிக்காமல் நீண்டது - இமைகளைத் தான்
கேட்கணும் ஏன் தடுக்க ஏலாம போனது
இப்போது மல்லாவியில்
நின்று பார்க்கின்றேன் அவள்
சொல்லாமல் போன காதலை
என் நாவில் அடக்கின்றேன்

துணுக்காய் கழிந்த போதும்
அப்போதைய துடிப்பெல்லாம் இப்போது
இல்லை


என் காதல்
துயரத்தைத் தழுவிய போதும்
என் நாடியில் தாடி இன்னும்
வளரவும் இல்லை

முற்றும்

ஐ. துஷ்யந்தன், S. T. மெடி கிளினிக்,
குருமன்காடு, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொஞ்சம் சிரியுங்கள்.

**ஒருவர் :** "கடைக்காரர் சீக்கிரம் ஒரு வடை கொடுங்க ரெயிலைப் பிடிக்கணும்"

**கடைக்காரர் :** "யோவ்! வடையை வச்சு எலியைத்தான் பிடிக்க முடியம். ரெயிலைப் பிடிக்க முடியாது"

***   ***   ***

**நிருபர் :** "உங்களுடைய கூந்தல் கருமையாக பளபளன்று நீளமாக இருக்கிறதே நீங்கள் உங்கள் கூந்தலை எப்படிப் பராமரிக்கிறீர்கள்?

**நடிகை :** "ஓ! அதுவா காலையில் குளிக்கும் போது நன்றாக ஷாம்பூ போட்டு கூந்தலைக் கழுவுகிறேன். பிறகு .'.பேன்ல காய வைக்கிறேன். பகலெல்லாம் தூசு தும்பு படாமல் பத்திரமாக பாதுகாக்கிறேன். இரவு படுக்கப்போகும் போது மட்டும் கழற்றி ஆணியில் மாட்டி விடுகிறேன்"

***   ***   ***

**நோயாளி :** "டாக்டர் ஏழாம் நம்பர் பெட்லே உள்ள நோயாளியை எப்போ டிஸ்சார்ஸ் பண்ணுவீங்க?

**டாக்டர் :** இன்னும் ரெண்டு மாசமாகும்

**நோயாளி :** நான் அந்த நோயாளிதான் வெளியே இருந்து பேசுறன் இனிமே உள்ளே வரமாட்டேன்.


***   ***   ***

**ஒருவன் :** "கண்ணே! உன் பாதம் பட்ட இடத்தில் நான் சாதம் போட்டுச் சாப்பிடுவேன்"

**ஒருத்தி :** "தட்டு வாங்கக்கூட உனக்கு வக்கில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தை கவரும் விந்தைச் செய்திகள்

## 01. நீலச்சிலுவைச் சங்கம்

மனிதநேயத்திற்கு துணைபுரிய அனுப்பப்பட்ட சேவை அமைப்பு செஞ்சிலுவைச் சங்கம் (றெட்குறோஸ்) நீலச்சிலுவைச் சங்கம் (புளுகுறோஸ்) எது தெரியுமா? விலங்குகள் நலம் காக்க இயங்கும் அமைப்பே இது.

## 02. முதல் செயற்கைக் கோள்

முதல் செயற்கைக் கோள் 04 அக்டோபர் 1957 இல் ஏவப்பட்டது. அனுப்பியவர்கள் ரஷ்யர்கள். இதன் பெயர் 'ஸ்புட்னிக்' ஸ்புட்னிக் என்ற ரஷ்யமொழில் சொல்லுக்கு என்று பொருள்

## 03. சப்தம் செய்யாத ஊமை விலங்கு

மிகவும் உயரமானது இது 19 அடிகூட வளரும் விலங்குகளில் எந்தவித சப்தமும் செய்யாத செய்ய முடியாத ஒரே விலங்கு ஒட்டகச்சிவிங்கி.

## 04. அயோடின்

இது இயற்கையில் கிடைக்கக்கூடிய ஒரு கனிமம் உடல் வளர்ச்சி, மூளையில் சீரான செயற்பாடுகள் இதன் பல்னாகும். கருவுற்ற தாய்க்கு அயோடின் அவசியம். இது பற்றாக்குறையானால் கழுத்துக்கழலை, மனவளர்ச்சியின்மை, மாலைக்கண், செவிட்டுத்தன்மை, சோர்வு கருச்சிதைவு ஏற்படலாம். நிலத்திலும் நீரிலும் அயோடின் சத்து உள்ளது. தினம் ஒருவருக்கு 130-200 மைக்ரோ கிராம் தேவை. அயோடின் கலந்த உப்பைப் பயன்படுத்தி அயோடின் நமக்கு சேரவழிசெய்யலாம். சமையலுக்கு அயோடின் கலந்த உப்பை பயன்படுத்துவது மிக நல்லது.

**அன்பான கவிஞர்களே, கதாசிரியர்களே,**
**பிருந்தாவனம் சஞ்சிகையின்**
**மூன்றாவது பிறந்த தினத்துக்கான ஆக்கங்களை**
**வெகு விரைவில் அனுப்பி வைக்கவும்.**
**ஒவ்வொரு ஆக்கங்களையும் தனித்தனியாகவும்,**
**தெளிவான எழுத்திலும் எழுத வேண்டும் என்பதை**
**தங்களுக்கு அறியத்தருகின்றேன்.**

**ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவையான சமையல்



## சொக்லேட் புடிங்

### தேவையான பொருட்கள்.


| | | |
|---|---|---|
| சொக்லேட் | : | 50 கிராம் |
| சீனி | : | ½ கப் |
| கொக்கோப்பவுடர் | : | 2 மேசைக்கரண்டி |
| அரிசி மா | : | 1 மேசைக்கரண்டி |
| கோர்ன் ஃப்ளோர் | : | 2 மேசைக்கரண்டி |
| உப்பு | : | 1/4 தேக்கரண்டி |
| பால் | : | 2 கப் |
| ஹெவிகிறீம் | : | 40 மில்லி கிராம் |
| வெள்ளை சொக்லேட் | : | சிறிதளவு |

### செய்முறை

சொக்லேட்டை துருவிக் கொள்ளவும் ஒரு பாத்திரத்தில் பால், சீனி, கொக்கோபவுடர், அரிசிமா, கோர்ன்ஃளோர், உப்புச் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். மிதமான தீயில் கடாவில் கலவையை ஊற்றி கைவிடாமல் கிளறவும். சிறிது கெட்டியாக ஆனதும் துருவிய சொக்லேட்டைச் சேர்த்துக் கிளறவும். இக் கலவை பாதியாக வரும் வரை கைவிடாமல் கிளறி ஹெவிகிறீம் வெனிலா எசென்ஸ் சேர்த்து இறக்கவும். ஒரு கிண்ணத்தில் போட்டு ஆறவிடவும் ஆறியதும் ஃப்ரிட்ஜில் வைத்து செட் செய்து துருவிய வெள்ளைச் சொக்லேட்டால் அலங்கரித்து பரிமாறவும்.

## கலர் ஃபுல் தோசை

### தேவையான பொருட்கள்.




| | | |
|---|---|---|
| பச்சரிசி | : | 2கப் |
| புழுங்கலரிசி | : | 2கப் |
| உழுத்தம்பருப்பு | : | 1/2கப் |
| வெந்தயம் | : | 1 தேக்கரண்டி |
| உப்பு | : | தேவைக்கேற்ப |
| கொத்தமல்லித்தழை | : | 1கப் |
| கரட், பீட்ரூட் | : | 1கப் |
| முள்ளங்கி / வெங்காயம் | : | 1கப் |
| எண்ணெய் | : | தேவைக்கேற்ப |

### செய்முறை

பச்சரிசி, புழுங்கலரிசி உழுத்தம் பருப்பு, வெந்தயம் இவற்றை 2 மணி நேரம் ஊறவைத்து உப்புச் சேர்த்து அரைத்து 6 மணி நேரம் புளிக்க வைக்கவும். பிறகு மாவை நான்கு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு காயைச் சேர்க்வும் சற்ற தழமனான சிறு தோசைகளாக தனித்தனியாக சுட்டெடுக்கவும். நான்கு கலர்தோசைகளையும் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிப் பரிமாறவும். இதற்குத் தொட்டுக்கொள்ள எள்ளு மிளகாய்ப் பொடி நன்றாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீகம்

## விரதங்களை அனுஷ்டிப்போர் தலை தோயவேண்டும் என்பது அவசியமா? குளித்துவிட்டு அனுஷ்டிக்க முடியாதா?

ஸ்நானம் என்றாலே தலைதோய்தல் தான். ஆலயம் செல்லுதல், வழிபாடு செய்தல், வீட்டில் பூஜைகள் முதலியவற்றில் ஈடுபடுதல் என எதனைச் செய்வதானாலும் நதிகள், குளங்களில் தலை முழுகி முழுமையாக நம்மைத் தூய்மை செய்தல் மிக அவசியம். நதி, குளம் இல்லாத இடங்களில் கிணற்று நீரை அல்லது குழாய் நீரை தலையில் ஊற்றி முழுமையாக உடல்முழுவதும் நனையத் தோய்வது அவசியம். ஆனால் எண்ணெய் வைத்து முழுகுதல் ஆகாது. (சனி வார விரதத்திற்கும், பெண்கள் தீட்டு கழிவதற்கும் மட்டும் எண்ணெய் முழுக்கு அவசியம்.)

அவ்வாறு ஸ்நானம் செய்வது மட்டுமன்றி, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்துக்கொள்ள வேண்டும். அவ்வுடுப்புக்கள் தோய்க்காத ஏனைய உடுப்புகளுடன் அளையாதவையாக இருக்கவும் வேண்டும். மடி வஸ்திரம் என இவற்றைக் குறிப்பிடுவர். தெய்வ சக்தி வேண்டுமெனில் ஆசாரம் மிக அவசியம். ஆசாரம் என்பது தூய்மை, புனிதம், ஒழுக்கம் என்பவையே.

நோயாளர்கள், இயலாதவர்கள் ,மட்டும் தலைதோய முடியாவிட்டால் உடலைக் கழுவிக்கொண்டு அல்லது உடல் முழுவதும் விபூதி பூசிக்கொண்டு (பஸ்ட ஸ்நானம்) வழிபாடுகளில் ஈடுபட சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன.

**சோமவார விரதத்திற்கு விளக்கு வைத்துச் சாப்பிடுதல் என்பது விதியாகச் சொல்கிறார்களே, அதன் விளக்கம் என்ன?**

பகல் முழுவதும் விரதமாக இருந்து இரவுப் பொழுது வந்ததும் அந்தி நேர வழிபாட்டை முடித்துக்கொண்டு அதன்பின் சாப்பிடவேண்டும். என்பது சோமவார விரதத்தின் நியதி. அந்தி நேரம் விளக்கு வைக்கப்படும். எனவே அந்தி நேரம் என்பதைக் குறிக்க விளக்கு வைத்துச் சாப்பிடுதல் என்ற சொற்பிரயோகம் வழக்கில் வந்துவிட்டது. இதனைப் புரிந்துகொள்ளாத சிலர், பசி தாங்க முடியாமல் பொழுது சாயுமுன் விளக்கு வைத்துச் சாப்பிடுவதையோ அல்லது சாப்பிடும் இடத்தில் விளக்கு ஒன்றை ஏற்றி வைத்துவிட்டுச் சாப்பிடுவதையோ வழக்கமாகக் கொணடால் அதனை எவ்வாறு விளக்குவது?


**கந்தஷஷ்டி போன்ற விரதங்களை அனுஷ்டிக்கின்ற நாட்களில் தீட்டு அல்லது துடக்கு வந்தால்என்ன செய்யவேண்டும்?**

அந்த வருடம் விரதம் பங்கமாகிவிட்டது என்றே கருதவேண்டும். அடுத்த வருடம் மீண்டும் விரதம் அனுட்டிக்கலாம். மொத்த எண்ணிக்கையில் ஒரு எண்ணிக்கை குறைந்துவிட்டதால் மேலதிகமாக இன்னொரு வருடம் அனுட்டிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DO You Speak English I'll teach you




## ஆங்கிலம் கற்போம்

**பிருந்தாவனம் சஞ்சிகை வாசக நெஞ்சங்களே!**
**மாணவச் செல்வங்களே!**
**மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி**

கடந்த இதழ்களில் பற்பல விடயங்களை கற்றிருந்தோம். குறிப்பாக தரம் 5 மாணவர்களுக்கு உகந்த பேச்சு ஆங்கிலத்தை வழங்கியிருந்தோம். இந்த இதழில் தரம் 06 தொடக்கம் G.C.E O/L மற்றும் G.C.E A/L மாணவர்களுக்கு அநேகமான பரீட்சைகளில் வழமையாக வரும் வினாக்களில் ஒன்றுதான்.

# Picture Description

### பட விளக்கம்

**இது சாதாரணமாக 5 புள்ளிகள் அல்லது சில சமயங்களில் 10 புள்ளிகளையும் தாங்கி வரும் ஒரு பகுதி அதாவது படங்களைத் தந்து அவற்றைப் பார்த்து 5 வசனங்கள் எழுதச் சொல்லி கேட்டிருந்தால் என்ன செய்ய வேண்டும் மாணவர்களே!**

01. படங்களில் பொருட்கள், ஆட்கள், மிருகங்கள், பறவைகள் இவ்வாறான விடயங்கள் காணப்படும் பட்சத்தில் உதாரணமாக.
 •மரமொன்றில் ஒரு பறவை இருந்தால்
 This is a picture of bird என்றோ அல்லது One bird is in this picture என்றோ எழுதலாம்.
 •படத்தில் பந்து ஒன்று இருந்தால்
 This is a picture of ball என்றோ அல்லது One ball is in this picture என்றோ எழுதலாம்.

02. படங்களில் ஏதாவது செயற்பாடுகள் அல்லது செயல்கள் நடைபெறுவது தெரிந்தால் உதாரணமாக
 •இரு மாணவர்கள் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருந்தால்
 Two students are playing cricket என்று எழுதலாம்.
 •இரு மாணவர்கள் மரமொன்றின் கீழ் அமர்ந்து கொண்டிருந்தால்
 Two students are sitting under a tree என்று எழுதலாம்.

03. படத்தில் பொருட்கள், ஆட்கள், பறவைகள், மிருகங்கள் போன்றவை காணப்பட்டால் (மாணவர்களே வினாக்களை நன்றாக வாசித்து) அது ஒருமைப் பெயரா அல்லது பன்மைப் பெயரா என இனங்காண வேண்டும். (first identify whether/ is it singular noun or pluaral noun) அவ்வாறு அது ஒருமையைக் குறித்தால் is என்பது எழுவாய்க்குப் பின் பயன்படும்.
 உதாரணம் : A cat is in this picture. இங்கு a cat என்பது Singular noun ஒருமையைக் குறிக்கும். அதே போல் There is a dog under the table. (அங்கே மேசைக்குக் கீழே நாயொன்று இருந்தால்) அதே போல் அங்கே மேசைக்கு மேலே சில புத்தகங்கள் இருந்தால்
 (There are some books on the table) இங்கு Some books (Plural) பன்மையாக இருப்பதால்

### வருந்துகின்றோம்!

கடந்த இதழில் அச்சுப் பதிப்பில் ஏற்பட்ட பிழைக்கு வருந்துகின்றோம்.

Imprtant woeds to Grate 05 students என தவறாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது Important Words to Grade 05 Students எனத் திருத்தமாக மாற்றுகின்றோம்.

**ஆசிரியர் எஸ்.யு.சிவம்**
T.P: 0773466949



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்களம் கற்போம்.
# සිංහල ඉගෙන ගනිමු
## சிங்கள இஹெண ஹனிமு

## කෙටි වාක්‍ය
### சிறிய வசனங்கள்.

**අම්මා බත් උයනවා**
அம்மா பத் உயனவா
அம்மா சோறு சமைக்கிறாள்

**හාවා දුවනවා**
ஹாவா துவனவா
முயல் ஓடுகிறது

**හාවා කැලේට දුවනවා**
ஹாவா கெலேட்ட துவனவா
முயல் காட்டுக்கு ஓடுகிறது

**බබා නිදාගන්නවා**
பபா நிதாகன்னவா
குழந்தை தூங்குகிறது

**බබා තොටිල්ලේ නිදාගන්නවා**
பபா தொட்டில்லே நிதாகன்னவா
குழந்தை தொட்டிலில் தூங்குகிறது




**අපි ඉගෙන ගන්නවා**
அ(ப்)பி இகெனகன்னவா
நாங்கள் படிக்கிறோம்


**අපි සිංහල ඉගෙන ගන්නවා**
அ(ப்)பி சிங்ஹல இகென கன்னவா
நாங்கள் சிங்களம் படிக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத சிந்தனைச் சிதறல் 24



## பெறும் சிந்தனை


விஞ்ஞானம் வளர்ந்ததாலே - பெண்ணே
தன்மானம் மறந்தாயா?
சுயமி எடுப்பதில் சுகம் கண்டு உன்
வாழ்வைத் தொலைத்தாயா?


தி.சினேகா. திருகோணமலை.

## பெறும் சிந்தனை

சுயமிக்கு அடிமையானாயே
சுதந்திரம் என்று நினைத்தாயே
கயமைக்குத் துணிந்தாயே
கண்ணீரில் மூழ்கப் போகிறாயே.

த.நந்தகுமார். மூன்றுமுறிப்பு. வவுனியா.





## பெறும் சிந்தனை

சுயமி எடுப்பதில் ஆர்வமாகி
சுயநிலை மறந்து நின்று
ரயிலிலும் அடிபட்டு போகிறாயே
உயிரின் பெறுமதி தெரியாது.

ச.ஜெஜனா. வாணி. கொடிகாமம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி ஒரு தொல்லை பேசி


பிருந்தாவன அன்பு வாசகர்களே... எழுத்தாளர்களே அறிவாளர்களே பிருந்தாவன ஆசிரியரே அனைவருக்கும் அன்பு வணக்கம் முதலில் கூற விரும்புகின்றேன். உங்கள் புத்தகத்தின் வாசகர் நான். எனது சில கருத்துக்கள் உண்மை சம்பவங்களை கூற விரும்புகின்றேன். நீங்கள் எழுதும் சில வசனம் என் மனதை வேதனையை உண்டு பண்ணுகிறது. என்னவென்றால் "விதவை" எனும் சொல் விதவை என்பது தொன்று தொட்டு வந்த ஆதிகால முன்னோர் வார்த்தை ஆனால் இன்றைய காலத்தில் பெண் தலைமைத்துவத்துமாக கொண்ட குடும்பத்தை சேர்ந்தவள் எனக்கு மூன்று குழந்தைகள் நான் எனது சுயமுயற்சியில் சிறிய கடை செய்து வருகின்றேன். எனது தாய் தந்தை எனது சகோதரர்கள் ஏழுபேர் ஆறு பெண்கள் ஒரு அண்ணன் எமது குடும்பத்தில் என்னை கன்னிப் பெண்ணைப் பார்ப்பது போல் காத்துவருகிறார்கள். நான் ஒரு குழந்தை போல் எனது வீட்டில் செல்லப்பிள்ளை நான் கவலையாக இருக்க முடியாது என்னை ஏதாவது சொல்லி சிரிக்க வைத்துவிடுவார்கள். அப்படி ஒரு அன்பான பண்பான குடும்பத்தை சேர்ந்தவள் நான். ஆனால் சில வேதனைகளை பெற்றோரிடம், சகோதர்களிடம் சொல்ல முடியாத நிலையில் எனக்கென ஒரு நண்பனை தேர்ந்து கொண்டேன். என் உயிரே அவன் போல் தான் தோன்றியது. ஆனால் நான் எனது அனைத்து விடயங்களையும் அவனிடமே கூறி வந்தேன். ஆனால் அவனின் செயற்பாடுகள் நடைமுறைகள் அனைத்தும் மாறுபட்டு காணப்பட்டதை நான் உணர்ந்தேன். அவன் ஏதாவது பிழையான செயற்பாடுகள் செய்வதானான் தகாத வார்த்தைகளை பிரயோகிப்பான். களியாட்ட இன்பத்தில் நாட்டம் கொள்பவனாக காணப்பட்டான். இதை நேரடியாகப் பிடிக்க வேண்டும் என்று பிடித்து விட்டேன். ஆனால் நண்பர்களை கூட நம்பமுடியாத காலமாக நண்பர்கள் மாறிவிட்டார்கள். ஆண்டவன் அழகான உலகை படைத்து மனிதர்களை உருவாக்கினான் அழகிய உலகில் வாழ கற்றுக்கொள்ளும் மனிதர்களை காணமுடியாது உள்ளது. உங்கள் அனைவருக்கும் முக்கிய கருத்தை கூற விரும்புகின்றேன். பெண் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் பெண் பிள்ளைகள் இருப்பார்கள். நீங்கள் தொழிலிற்கு சென்று விடுவீர்கள் ஆனால் பிள்ளைகளிற்கு சில கருத்துக்களை கூற முன் வாருங்கள். என்னவென்றால் தொலைபேசி என்று பேய் ஒன்று எங்கள் எல்லோர் கையிலும் உள்ளது. ஆனால் நீங்கள் நினைக்காதீர்கள் எனது பிள்ளையின் கையில் இல்லை என்று நீங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை என்னுடைய பிள்ளை பிழையானவர்கள் இல்லை என்பதை ஒவ்வொரு தாயும் உணர்ந்தவர்களாக காணப்படுகிறார்கள். ஆனால் இன்றைய காலத்தில் ஏதோ ஒரு வகையில் நண்பர்களிடம் தொலைபேசி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் என்ன செய்வார்கள் தன்னுடைய நண்பர்களுடன் களியாட்ட படங்களை நிச்சயமாக பார்வையிட்டு இருப்பார்கள். இதை பெற்றோரிற்கு கூற மாட்டார்கள். பத்து வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் அம்மா என்னை இவர் அங்கே தொட்டார், இங்கே தொட்டார் என கூறும். ஆனால் பருவம் அடைந்த பின் கடைசி வரை கூற மாட்டார்கள். இன்று எம் பிள்ளைகள் பெற்ற தாயிற்கு தெரியாமல் கதவை தள்ளிட்டு உடைகளை மாற்றுவர்கள் ஆனால் எவனோ ஒருவனிற்கு இனம் தெரியாத ஒருவனிற்கு பூப்போன்ற உங்கள் பிள்ளைகளின் இதள்களை பிய்தது சின்னா பின்னம் ஆக்குகிறார்கள், சூரையாடுகிறார்கள். போன் எனும் பேயில் உள்ள கமராவை கழற்றி நெற்றியில் ஒட்டிக் கொள்ளலாம். சேட் பட்டினில், காதில் சேட்கொலரில் இன்னும் எங்காவது வைத்து உங்கள் பிள்ளைகளின் அனைத்து விடயங்களையும் எடுக்கபட்டு கிழமையில் அவர்கள் கூப்பிடும் போடு போகாவிட்டா வெருட்டப்படுகிறார்கள். இதற்கும் இடம் தராவிட்டால் உனது நண்பியின் நம்பரை தா என மிரட்டப்படுவார்கள். ஏலாக் கொடுமையில் தன்னை பாதுகாப்பதற்காக நண்பியின் நம்பர் சென்றுவிடுகிறது. இதில் எத்தனை பேர் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதை அறிய முடியாத நிலையில் உள்ளார்கள். பூப் போன்ற உங்கள் பிள்ளைகளிற்கு அறியப்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகள் பாதுகாப்பாக நிச்சயமாக இருப்பார்கள் அறிவான குழந்தைகள் தீய நோய்கள் எமது பிள்ளைகளிற்கு வராமல் பாதுகாக்க தாயாகிய எம்மால் முடியும் என்பதை தங்களிற்கு உறுதியாக அறியத்தருகின்றேன். எதையும் வெளிப்படையாக சொல்லுங்கள் பிள்ளைகளுடன் நண்பர்களாக இருங்கள். பெற்றதாயால் மட்டுமே பிள்ளையின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமே தவிர வேறு எவராலும் முடியாது என்பதை உறுதியாக அறியத்தருகின்றேன்.

நிறைவு

**கிறேஸ், கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யோகாசனம்

## கும்பிடாசனம்

மக்கள் எல்லோரும் யோகாசானம் பழகுதல் வேண்டும். உடல் அப்பியாசமும் உள்தூய்மையும் தருவது. இளமையிலேயே இதனைப் பயின்று பழகி வந்தால் பல நன்மைகள் உண்டாவதை அறியலாம். உணவுக்கட்டுப்பாடு, உடற்கட்டுப்பாடு முதலிய நற்பழக்கங்கள் மிகுந்து எம்மை மனிதருள் தேவராக்கும். இன்னும் நினைவாற்றல் மிகுந்து எல்லையில்லாத அளவில் கல்வித்தரம் உயரும். கல்வி உயர்க்கலை உயரும், கலை உயரத் தொழில் உயரும், தொழில் உயர நாடு உயரும், நாடு உயர நாமும் உயர்ந்து நல்லவராவோம்.

சுவாசத்தை மெதுவாக மூக்கினால் இழுத்து விடவும்.

## பிறையாசனம்



இத பிறையாசனத்தை அர்த்த சக்கராவனம் என்றும் சிலர் கூறுவார்கள். அர்த்த என்றால் பாதி என்று பொருள். சக்கராசனம் என்ற ஆசனத்தால் முழுவதுமாக பின்னால் வளைய வேண்டியிருக்கின்றது. ஆனால் பிறையாசனத்தில் பாதி அளவு பின் காலை நன்றாக பிடித்தபடி வளைந்தால் போதுமானது. முதலில் நின்ற நிலையில் காலைச் சற்று அகலமாக வைத்துக் கொள்ளவும். பின்னர் கைகளால் நாரியைப் பிடித்துக் கொண்டு மெதுவாக பின்னால் முடிந்த அளவிற்கு வளைய வேண்டும். முழங்கால்கள் வளையாமல் (முட்டிகளை) பார்த்துக் கொள்ள சாதாரணமாகவே மூச்சு இருக்கட்டும். அழமான மூச்சை உள்ளிழுத்து அவதிப்படாதீர்கள் தினம் 4 முறை செய்து பழகுக. நல்ல பலன் கிடைக்கும். (கவனம்) பின்னால் வளையும் போது மூச்சை வெளிவிட்டு சற்று நேரம் அதே நிலையில் இருக்கவும்.

பயன்கள்.

முதுகுத்துண்டு பலம் பெறும் முதமை நிலை மறைந்து மனத்திற்கு எப்போதும் உற்சாகம் கிடைக்கும். இளமை ததும்பும் மேனியில் உள்ள எல்லா நாடி நரம்புகளும் நன்கு தூண்டப்பட்டு, அதனதன் வேலையை ஒழுங்காகச் செய்யும் தன்மை கிட்டுவதால் எந்நேரமும் புதிய உணர்ச்சி தோன்றும். சோம்பல் ஒழியுமீ சுறுசுறுப்பு உண்டாகும். முதகின் கூனல் நிலை அகன்று நிமிர்ந்த மார்பு பெறுவீர்கள் நெஞ்சுக்கூடு நன்கு விரிந்து கொடுப்பதால் மார்பும் நுரையீரலும் அகன்று சுவாச உறுப்புகட்கு மிகுந்த பலம் கொடுக்கும்.

மேலும் பிறையாசனமானது கூடிய ரோகம், (T,B). நீரிழிவு, ஆஸ்துமா வயிற்றுக் கோளாறுகள், சிறுநீரகக் குறைபாடுகள் போன்றவற்றை முழுவதுமாக நீக்கிவிடும்.

இடுப்பு பகுதி நெகிழ்ந்து கொடுப்பதால் ஒடுங்கிய அழகான இடுப்பு அமையும் நல்ல மேனி அழகையும் இது தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பேச நினைப்பதெல்லாம் ஒரு கண்ணோட்டம்

இனிய வணக்கம் நண்பர்களே!



முதல் நிலை கவிஞர் நீமா என்ன சொன்னார் பார்ப்போம் நல்லதொரு கருத்தை வலியுறுத்தி இக்கவிதையை வடித்துள்ளார் நிலவே மலைத்தேனே அழகே உன் அழகின் அடிமை நானே இருங்க ...! இதெல்லாம் எதற்கு பெண்ணை பெண்ணாய் மதித்தலே சிறப்பென்கிறார் நன்னெறி வழியொன்றை தேடி கைபிடித்து நடப்போம் வா என்கிறார்.

அன்றில் பறவை ஒன்றையிழந்தொன்று வாழாது அதுபோல் வாழலாமென்கிறார் உணர்வு சமமென்றுணர்ந்து மதித்து வாழ்வதே வாழ்வென்கிறார்.ஆயுள் நீளும் வரை இணைந்து வாழ்வோம் நான் பேச நினைப்பதை நீ பேசி நீ நானாகி நான் நீயாகி வாசி. தேன் சேகரிக்கும் தேனீ போல் தேடி நீ வா என்கிறார். அழகு தமிழில் அழகுற சொற்களிணைத்து சிறப்பானதொரு கவிதையை தந்துள்ளார் வாழ்த்துகள் சகோ...!

கவிநெஞ்சன் காதல் நெஞ்சனாக மாறிவிட்டார் ஆமா அவர் என்ன சொன்னார் ... அழகா சொல்லியிருக்கார். மயக்கம் தந்திருக்கார் பார்ப்போம்... எண்ணமதை முன்மொழிந்து எழில்முகம் காண வந்தேன். வண்ணமுக பைங்கிளியே வரித்து விட்டேன் . உன்னழகை கண்ட நாள் முதலாக நெஞ்சம் துடித்ததடி. வண்டு வந்து துளைத்தது போல உடல் வாடி நின்றதடி ஆஹா வண்டு துளைத்தது போல வாடி மெலிந்ததடி காதலியே. சிறப்பு ஐயா கடைசியாக நான் பேச நினைத்ததெல்லாம் நீ பேசி சொக்க வைத்தாய். வாடி நின்ற என் மனதை வலம் வர செய்து விட்டாய். சிறப்பான கவிதை வாழ்த்துகள் ஐயா.

கண்ணன் அண்ணா பேசுவதெல்லாம்... எப்படிச்சொல்ல என்னன்னு சொல்ல. நானாக நானில்லை நலமாக தானில்லை. நான் கொண்ட எண்ணமதை எப்படித்தான் சொல்ல. அட பாவத்த... தானாக நெஞ்சிற்குள் இடமீந்து உனையமர்த்தி தடுமாறும் சிந்தை. நான் எவ்வாறு சொல்லிடுவேன். இருள் கொண்ட வானத்தை துவைக்கும் நிலவாக தான் வந்தாய் வானெங்கும் வெள்ளொளியை வளமாக நீ வீசி.. அதோட விட்டாரா இந்த கவிஞர். மானாக மயிலாக மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துலெட்சுமி ஸ்ரீதர் கவிதை என்ன சொல்கிறது பார்க்கலாம் கண்ணோடு கண்ணோக்கி விரலோடு விரல் கோர்த்து அன்பாய் மகிழ்வோமே அருகினில் என்றும் இருப்போமே என்கிறார் அது சரி ... அழகான ரசனை கவிதை முழுவதும் கொட்டிக்கிடக்கிறது. அறிவின் புரிதலிலே பரிவதன் விரிதலிலே இன்று பிறந்தவராய் இதயவானில் பறப்போமா? புதிதாக பிறந்தோம் இதயவானில் இறகை விரிக்கலாம் என்கிறார். நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் தேவதையாய் நீ இனிக்க கொஞ்சி மகிழ்ந்திடவே குளிர் நிலவாய் வருவாயா என்கிறார். கண்ணே மணியே எப்போ வருவாய் என்று திருவாய் மலர்வாயா என முடித்துள்ளார் அழகு கவிதை வாழ்த்துகள்.

காதல் கவிதைகளுக்கு மட்டும் கவிஞர்களின் எழுதுகோலிற்கு சிறகு முளைத்துவிடுமோ? கற்பனை சுகமாய் பறந்திடுமோ? யாரைப்பற்றி சொல்கிறேன்னா பைந்தமிழ் பாமணி #சரஸ்வதிபாஸ்கரன் அவர்கள் கவிதை தான். காதல் கனியே கவிதை மலரே மோதல் இனியே முற்றிலும் வேண்டாம் மணமுடை மலராக பல நாட்கள் உணர்ந்தேனே என்னுள்ளே அதை இனிதாக எழுதிட விழைகின்றேன் கனிநிகர் அழகுக் கன்னியே சிலையாய் நின்று சிந்தை சிதைத்து செல்கின்றாயே என்றும் கதியே நீ என காதல் மலர விதியை எண்ணி வியக்கும் வேளையில் பதியாய் என்னை மனதில் பதியேன் என அசத்தலாக முடிக்கின்றார். வாழ்த்துகள் கவிஞரே.

தங்களுக்கு நிகர் தாங்களே அழகான சொல்லாடல் சிறப்பு மற்றொரு கவிஞர் #சிந்தியாசிந்தி என்னமோ சொன்னாரே... மறந்திடுச்சே .... என்னவா இருக்கும் ... முக்காலமும் உணர்ந்தவரோ... நான் சொல்லவில்லை அவரே சொல்கிறார் காதலாய் எதிர்கால கனவுகளுக்காக கடந்த கால நினைவுகளில் மூழ்கி நிகழ்காலத்தை தொலைக்கின்றேன். ஏனாம்...? நீ பேசும் போதெல்லாம் நான் பேச விரும்புகிறேன் சரி பேச வேண்டியது தானே உதடுவரை வரும் வார்த்தை ஒட்டிக்கொள்கிறதாம். பேச நினைப்பதெல்லாம் கவிதையாக்கி காற்றினிலே அனுப்பி வைக்க காகிதத்தை தேடுகின்றேன் கற்பனை தீர்ந்து விடுகிறது. அட பாவமே அப்படி மட்டும் நினைக்காதீர்கள் அடுத்த வரியை பாருங்கள். மௌன மொழி புரியுமென்றால் மனதினிலே பாரமில்லை விழிமொழிகள் புரியுமென்றால் நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேசுவாய் என முடிகிறது கவிதை. சிறப்பான கவிதை. வாழ்த்துக்கள்.

அழகான கவிதைகள் சிறப்பாக அலங்கரித்தனை காதல் வானிலே. அரங்கத்தை இன்னும் சில கன்னங்களில் நீ பதித்த இதழ் மொழியான முத்தம் என் வெட்கத்தை பரிசாக தருகிறது. துடிக்கும் இதயத்தின் ஓசை மொழி அறிந்தவன் நீதானே நான் பேச நினைப்பதெல்லாம் நான் பேசும் முன்பே நீ உணர்ந்தாயே உயிரே என்று சரண்யாசுரேஷ்சும்.

என் இதயத்தில் பிரவாகமாய் எழுந்துவிடும் எண்ணச் சிதறல்களைக் கொட்டிவிடத் துடிக்கிறேன் நீயோ உன் நெஞ்சத்தில் மஞ்சமிட்டிருக்கும் காதலனைப் பற்றியே கொஞ்சுதமிழில் குலவிக் கொண்டிருக்கிறாயே என்று பிரியநிலாவும்.

இருவரின் இதயத்திலும் ஒரே தாளலய சுருதி தான் இணைந்திசை வாசிப்பதும் கண்கள் மூடி லயிப்பதும் தானாய் சிரிப்பதும் இதயத்திற்கு இறகுகள் முளைத்ததும் இடம்மாறி இரண்டும் பறப்பதும் என்ன அழகு தமிழ் காதலோடு தமிழ் கொஞ்சிடும் போது இன்னும் இளமையாய் மொழியினிக்கிறது. அழகான கவிதையை #கிருஷ்ணதிலகாவும் மான் விழியின் பார்வையிலே மதி மறந்தேன் நானடி விழிகளின் ஜாடையிலே விண்மீன்களும் மயங்கிடுமே நான் மயங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமும் உரைத்திடவோ தேன் மொழியே திகட்டா காவியமே அச்சச்சோ அப்புறம்.. ஆரணங்கே அழகோவியமே அன்னமென நடை பழகி அன்றலர்ந்த தாமரையாய் அழகு மலரென நீயும் வர முன்னழகும் பின்னழகும் முந்தி வந்து தாக்கிடுதே. காந்தம் கவர் இரும்பெனவே கவர்ந்தே எனை அள்ளுதடி. ச்சும்மா பின்னி பெடலெடுத்திருக்காங்க #மீராஸ்ரீ.

இதயத்துக்குள் புதைக்கப்பட்ட பொக்கிசமான என் காதலை இதய துடிப்புக்களை எழுத்தாக்கி உயிருட்டி கவிதையில் அவளைக் கருவாக்கி நான் பேச நினைப்பதெல்லாம் பெண்ணவள் காதினில் வீழ்ந்திடவே இதயத்துடிப்பினை எழுத்தாக்கி எழுதிடுவேன் என்று #கார்முகிலும் உன்நினைவு ஒன்றே உயிராக கொண்டு ஊமை கண்ட கனவாக ஒன்றும் சொல்ல நினைக்காமல் உணர்வை இழந்து தவிக்கின்றேன் அன்பு மொழியை யார் பேசினால் என்ன நீயே பேசு நான் பேச நினைப்பதை எல்லாம் என அன்பு மொழி யார் பேசினாலும் காதல் மகிழும் நீயே பேசு என #அருணா செல்வமும் தாரகையே நின் பொற்பாதங்கள் பிடிக்கின்றேன் போதை களைந்த என் இதயப் பேதையாய் வந்தென்னை அணைத்திடு இடம் கொடு...... நம் மனம் பேச நினைப்பதெல்லாம் பேசட்டும் காதலியின் பொற்பாதம் பிடிப்பதும் ஒரு வரம் தானோ. அழகான கவிதைக்கு சொந்தகாரர் காந்தரூபன். நான் பேச நினைப்பதெல்லாம்... நிலவோடு மேகமாய் மழையோடு தூறலாய் இரவோடு நிழலாய் அலையோடு காற்றாய் மலரோடு வாசமாய் நினைவோடு சுவாசமாய் விழியோடு இமைகளாய் இதழோடு சிரிப்பாய் நீ வேண்டும் என்னோடு அதுவும் என்றென்றும் நிலவானல் மேகமாய் பெரும் மழையோடு தூரலாய் இயற்கையோடு இணைவோம் வா அழைப்பது பிரபு வாய்ஸ் நீ பேசி நான் கேட்டதெல்லாம் தேன்தான் தோழி என ஆரம்பித்து நலமே நீ என்றால்தானே நான் வாழ்வேன். காதல் சொல்லி நீயே வந்துவிடு நான் பேசும் எண்ணமெல்லாம் நீதான். நானென்ன நீயென்ன நாமாவோம் வா தோழி என அழகுற காதலை வரைந்துள்ளார் கவிஞர் ந.பாண்டியராஜன். அழகான கவிதைகள் மூலம் காதல்வானிலே 05 சிறப்பாக்கிய கவிஞர்களுக்கு நன்றி...



# பேராசை

புத்தனாகிட ஆசைதான்
புத்தகங்களைப் புரட்டையிலே
இச்சை கொண்டது
ஆசையெனும் மந்திரமே
புத்தரின் வரலாறறியவே

மொத்தம் அனைத்திலும்
ஆசையில்லா வார்த்தைகளே
ஆசையோடு கண்களும்
கடந்திடனுமா என்கிறதே...

எண்பதிலும் இருபதாமே
ஆசைகளே ஆதாரமாமே
எப்படி துறந்தீர் - புத்தரே
ஆசையோடு கேட்கிறேன்...

ஆசைகள் இல்லாத
உந்தன் வாழ்வை
ஆசையோடு வாழ்ந்திட
ஆசையில்லாதவரே வரமருளும்...

இந்த ஆசையைத்
தவிர்த் தெந்தாசையும்
இனி வேண்டாமே...!

**அன்னராஜேஷ் வீ. இந்தியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்ததில் நேசித்தது!



*நள்ளிரவு தாண்டியும் WhatsApp, குயஉநடிழழம இல் காலம் கழிப்பவர்களே இதை கொஞ்சம் கவனிக்கவும்!* நமது உடல் ஓர் அற்புத படைப்பு. அதில் ஆச்சரியப்படத்தக்க பல அம்சங்கள் உள்ளன.!! அதில் ஒன்றுதான் நமது உடலில் நேரத்தை தானாகவே ஒழுங்கு படுத்தும் உயிரியல் நேர முறைமை (Biological Clock System)!!! இதனை வழி நடத்தும் ஒரு சுரப்பி நம் ஒவ்வொருவரின் தலையிலும் உள்ளது. அதுதான் பினியல் சுரப்பி! *கடலை உருண்டை வடிவில் இருக்கும் இந்த *ஐநேயுடு புடயுனேு பார்வை நரம்புடன் இணைக்கப் பட்டுள்ளது!!*

இந்த பினியல் சுரப்பி ஓர் அரிய பொருளை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சுரக்கிறது!! *அதுதான் மெலடோனின் (melatonin)!!* இந்த அதிசய அரிய பொருளின் பலன் மகத்தானது! புற்று நோயைக் குணப்படுத்தும் இயற்கை மருந்து இந்தப் பொருளில் இருக்கிறது. மெலடோனின் சுரக்க வேண்டும் என்றால் ஒரே ஒரு நிபந்தனை. இரவின் இருளாக இருக்க வேண்டும்!! *இரவின் இருளில்தான் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்கும்!!* *அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பார்வை நரம்பு மூலமாக் அது இரவின் இருளை அறிந்து கொள்ளும்!!* *ஒவ்வொரு நாளும் இரவு 10க்குப் பிற்கு இருளில் சுரக்கும். மெலடோனின், நமது இரத்த நாளங்களில் பாய்ந்தோடும்.!!* *நமது கண்கள் வெளிச்சத்தில் பட்டுக் கொண்டிருந்தால் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்காது!!*

*பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்க ஆர்மபித்து காலை 5 மணிக்கு நிறுத்தி விடும்!!* இரவு நீண்ட நேரம் கண் விழித்திருந்தால் நாம் புற்று நோயைக் குணப்படுத்தும் மெலடோனின் என்ற இயற்கை மருந்தை இழந்தவர்களாக இருப்போம்!!!! எனவே இரவு முற்கூட்டியே உறங்கி அதிகாலையில் எழுவது புற்று நோயைத் தடுக்கும் என்று இன்று மருத்துவ உலகம் கூறுகிறது!! அதே போன்று அதிகாலையில் காற்று வெளி மண்டலத்தில் ஓஸோன் நிறைந்திருக்கும்.

ஒரு மனிதன் அதிகாலையில் எழுந்து நடமாட ஆரம்பித்தால்; இந்த ஓஸோன் காற்றை அவன் சுவாசிப்பான்.!! இது நமது உடலிலுள்ள நோய்களைக் குணப்படுத்தி, நம் ஆயுளை அதிகரிக்கும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர்!! இரவு முன்கூட்டியே உறங்குவதால் மெலடோனின் கிடைக்கிறது! அதிகாலையில் எழுந்து அலுவல்களைத் துவங்குவதால் ஓஸோன் கிடைக்கிறது!! நமது உடலின் ஆரோக்கியம் அனைத்தும் இவற்றில் அடங்கியிருக்கிறது.

*அதிகாலையின் சில மணி நேரங்கள் அந்த நாளின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கக் கூடியவையாக இருக்கின்றன!!* *அதிகாலையில் எழும்போது நமது மூளையும், இன்னபிற உறுப்புகளும் பூரண ஓய்வு பெற்று வேலை செய்ய தயாராக இருக்கும்!!* அந்த நேரத்தில் செய்யும் பணிகள் அனைத்தும் திறமை மிக்கதாகவும், ஆற்றல் அழுத்தம் மிக்கதாகவும் திகழும்!! *எனவே முன் எழுந்து முன் மறையும் அதிசய மெலடோனினைப் பெறவும், அதிகாலைப் பொழுதின் ஓஸோனைப் பெற்று பயனடைவோம்.*

அமுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியநிலாவின்.....

# பிருந்தாவனம்

சஞ்சிகையின்
மூன்றாவது பிறந்ததின
## அழைப்பிதழ்

**காலம்:**
27.08.2017 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:**
காலை 09.00 மணி

**இடம்:**
நகர விருந்தினர் மண்டபம் (Rest House)
ஸ்ரேசன் வீதி, வவுனியா.

**தலைமை**

இன்தமிழ் இனியன்
**திரு.S.S.வாசன் M.A.**
மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்

**பிரதம விருந்தினர்**

**கௌரவ.ந.சிவசக்தி ஆனந்தன் அவர்கள்**
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்

## சிறப்புப் பிரதி பெறுவோர்கள்

1. மா. கதிர்காமராஜா (புஸ்)-(வாடி வீடு, வவுனியா)
2. சிறிகாந் (யாழ் அசி, கிளிநொச்சி)
3. சி.சுரேஸ்குமார் (கிளிநொச்சி)
4. இ.மயூரன் (வேள்ட் எக்ஸ்பிரஸ், வவுனியா)
5. கணேசமூர்த்தி (கிளிநொச்சி)
6. சி.சுதர்சினி (கிளிநொச்சி)
7. கனகராசா (லங்கா சத்சிஸ்ரம், வவுனியா)
8. எ.லாவண்யா (தோணிக்கல், வவுனியா)
9. அ.ரஞ்சனாதேவி (தோணிக்கல்)
10. சி.சகிலாதேவி (தோணிக்கல்)
11. விக்னேஸ்வரன் (முகாமையாளர், கருமாரி அம்மன் ஆலயம்)
12. த.ஜெயரஞ்சினி (குட்செட் றோட், வவுனியா)
13. செ.யோகம்மா (குட்செட் றோட், வவுனியா)
14. சி.சபீஸ்குமார் (திருநாவற்குளம், வவுனியா)
15. கோ.மதிவதனா (குட்செட் றோட், வவுனியா)
16. பு.லிங்கராஜ் (சுகாதாரத் திணைக்களம், வவுனியா)
17. து.துரைராஜசிங்கா (சுகாதாரத் திணைக்களம், வவுனியா)
18. முருகேசு ஜெயலட்சுமி (வவுனியா)
19. இ.கார்த்திகேசன் (பஸ் ஸ்ராண்ட், வவுனியா)
20. யு.மகேந்திரராசா (பஸ் ஸ்ராண்ட், வவுனியா)
21. K.ரத்தினேஸ்வரன் (சோதிடர், வவுனியா)
22. K.முரளி (கணேசபுரம், வவுனியா)
23. S.ஜீவகுமார் (வேப்பங்குளம், ஜீவன் காட்வெயார்)
24. நகுலேஸ்வரன் (திருநகர், கிளிநொச்சி)
25. கணேஸ்குமார் கிறேசி (கிளிநொச்சி)
26. கடலூரான் சுமன் (கிளிநொச்சி)
27. சுதர்சன் (லேற்றஸ் பிறின்ரஸ், வவுனியா)
28. செல்வா (கிளிநொச்சி)
29. த.பிரியதர்சினி (தேக்கவத்தை, வவுனியா)
30. புஸ்பநாதன் (சமயபுரம், வவுனியா)
31. சாந்தி (பரசங்குளம், வவுனியா)
32. ச.தவமலர் (பரசங்குளம், வவுனியா)
33. ச.நிரஞ்சனா (பரசங்குளம், வவுனியா)
34. சத்தியநாதன் (பரசங்குளம், வவுனியா)
35. ராஜன் (பரசங்குளம், வவுனியா)
36. த.கௌரியப்பிள்ளை (கூமாங்குளம்)
37. கிருபானந்தராஜா (பண்டாரிகுளம், வவுனியா)
38. ஐ.துஷ்யந்தன் (வேப்பங்குளம், வவுனியா)
39. நந்தகுமார் (பூவரசங்குளம், வவுனியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வொழுங்கு

- மங்கல விளக்கேற்றல்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை:
- தலைமையுரை:
  இன்தமிழ் இனியன் S.S.வாசன் அவர்கள்
- வரவேற்பு நடனம்:
  கருமாரி அறநெறிப் பாடசாலை மாணவர்கள்
- ஆசியுரை:
  சிவஸ்ரீ.பிரபாகரக் குருக்கள் அவர்கள்
  அருட்தந்தை சத்தியராஜ் அவர்கள்
  மௌலவி எம்.எப்.சாதிக்கீன் அவர்கள்
- நடனம்:
  ந.அனோஜிகா
- சிறப்பிதழ் வெளியீடு
- நாடகம்:
  கிளிநொச்சி செல்வாவின்
  " மூன்றாம் இராவணன்"
- சஞ்சிகை விமர்சனம்:
  வே.முல்லைத்தீபன் அவர்கள் (தமிழ் ஆசிரியர்)
- நடனம்:
  தர்சன் ஆசிரியர்
- விவாத மேடை:
  முகவலைத்தளங்கள் பாதுகாப்பானதா?
  ஆபத்தானதா?
  தலைமை: யோ.புரட்சி
- நாடகம்:
  இந்துமதி ஆசிரியரின் நெறிப்படுத்தலில்
  "வள்ளி"
- கவியரங்கம்:
  "நாங்கள் முன்வைப்பது நம்பிக்கையில்லா பிரேரணை"
  இ.ராஜேஸ்வரன் ஐ.யோகநாதன்
  வன்னியூர் செந்தூரன் மாணிக்கம் ஜெகன்
- பிரதம விருந்தினர் உரை:
  கௌரவ ந.சிவசக்தி ஆனந்தன் அவர்கள்
- சிறப்பு விருந்தினர் உரை:
  ஆசிரியர் ட.நடேசமூர்த்தி அவர்கள்
- விருந்தினர் உரை
- நன்றியுரை:
  சஞ்சிகை ஆசிரியர்

## நிகழ்ச்சித் தொகுப்பு

**திரு.இ.ராஜேஸ்வரன்**

## கௌரவ விருந்தினர்கள்

**திரு.ந.பிறேம்குமார் அவர்கள்**
(தலைவர், தமிழர் ஒன்றியம், கொலண்ட்)

**திரு.ந.கனகரத்தினம் அவர்கள்**
(ஆசிரியர், தம்பனைச்சோலை ம.வி)

**திருமதி.கலைவாணி நாகேஸ்வரன் அவர்கள்**
(ஆசிரியர், வ/முஸ்லிம் ம.வி)

**திரு.பி.பத்மறெஜி (B.B.A, Dip.) அவர்கள்**
(ஆசிரியர், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்)

**திருமதி.சுபாசினி சிவதர்சன் அவர்கள்**
(மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**திரு.உமாசிவம் அவர்கள்** - (சுற்றங்கம்)

**திரு.சு.சிவராசா அவர்கள்**
(அதிபர், புளியங்குளம் ஆரம்பப் பாடசாலை)

**திரு.கனகராசா அவர்கள்**
(லங்கா சத் சிஸ்ரம், வவுனியா)

**திரு.கிருஸ்ணசாமி அவர்கள்**
(ஆசிரியர், மாகோ)

**திரு.சிங்கபாகு சிவகுமார் அவர்கள்**
(வைத்தியர், உறவுகளுக்கு கரம் கொடுப்போம்
யாழ். மாவட்ட இணைப்பாளர்)

**திருமதி.பு.கிருபராசா அவர்கள்**
(அதிபர், கருங்காலிக்குளம் அ.த.க பாடசாலை)

**திரு.பா.வசந்தகுமார் அவர்கள்**
(தபாலக உத்தியோகத்தர், வவுனியா)

**திரு.வ.அருளானந்தம் அவர்கள்**
(சமாதான நீதவான்)

**திரு.அரசரத்தினம் அவர்கள்**
(ஓய்வு பெற்ற அதிபர், ஓமந்தை)

**திருமதி.தனுசியா குலாகலகரன் அவர்கள்**
(அட்வெண்டிஸ்ற் சர்வதேச பாடசாலை, வவுனியா)

**திரு.சிற்றம்பலம் அவர்கள்**
(ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர்)

**திரு.க.பேரின்பதேவர் அவர்கள்**
(ஓய்வு பெற்ற இ.போ.ச பரிசோதகர்)

**திரு.பரமசிவம் ஜோர்ஜ் அவர்கள்**
(பிரதேச செயலகம், வவுனியா)

**திரு.பொ.செல்வநாயகம் அவர்கள்**
(வாணி அச்சக உரிமையாளர், வவுனியா)

**ஊடகவியலாளர்கள்**

## சிறப்பு விருந்தினர்கள்

**கௌரவ.ம.தியாகராசா அவர்கள்**
(மாகாண சபை உறுப்பினர், வடமாகாணம்)

**கௌரவ.இ.இந்திரராசா அவர்கள்**
(மாகாண சபை உறுப்பினர், வடமாகாணம்)

**கௌரவ.க.ஐயம்பிள்ளை அவர்கள்**
(ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர், வவுனியா)

**திருமதி.லில்லிபுளோறா நடேசமூர்த்தி அவர்கள்**
(முன்னாள் ஆசிரியர், ஓமந்தை)

**அருந்தவராசா (மேழிக்குமரன்) அவர்கள்**

**திரு.ம.ஞானசீலன் அவர்கள்**
(முகாமைத்துவ உதவியாளர், கச்சேரி)

**திரு.மா.கதிர்காமராஜா (புஸ்) JP அவர்கள்**
(வாடி வீடு, வவுனியா)

**திரு.இ.நித்தியானந்தன் (M.A) அவர்கள்**
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர், வவுனியா)

**திரு.ச.ஜெயச்சந்திரன் அவர்கள்**
(ஆசிரிய நிலைய முகாமையாளர், புளியங்குளம்)

**செல்வி.உமா இராசையா அவர்கள்**
(ஓய்வு பெற்ற அதிபர், வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**திரு.வி.சிவநேசன் அவர்கள்**
(அதிபர், கோட்டடி நமசிவாய வித்தியாலயம்)

**திரு.ந.பார்த்தீபன் அவர்கள்**
(விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா)

**திரு.சண்முகரத்தினம் அவர்கள்**
(சோதிடமணி, சற்பிரசங்க சைவமணி)

**திரு.இ.மயூரன் அவர்கள்**
(வெஸ்ட் எக்ஸ்பிரஸ் உரிமையாளர், வவுனியா)

**திரு.க.சிவபாலன் அவர்கள்**
(சிவா எலக்ரோனிக், வவுனியா)

**திரு.சிறிகாந் அவர்கள்**
(யாழ் அசி உரிமையாளர், கிளிநொச்சி)

**திரு.செ.சந்திரகுமார் கண்ணன்அவர்கள்**
(தமிழ் விருட்சம்)

**திரு.கிருபாகரன் அவர்கள்**
(கிருபா லேணர்ஸ், வவுனியா)

**திரு.மாணிக்கம் ஜெகன் அவர்கள்**
(கவிஞர், குறும்பட நடிகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Lanka Sat Systems




Over 20 Years Experience in Satellite Field

The Dish Doctors
OVER 20 YEARS EXPERIENCE IN SATELLITE FIELD

**Dish Tv Lanka Dealer in Vavuniya & Madawachchi**

**சகலவிதமான றிசீவர்களும்**
**உடனுக்குடன்**
**திருத்திக் கொடுக்கப்படும்**
**மற்றும் அனைத்து**
**டிஷ் அன்ரனாக்களுக்கும்**
**றீச்சார்ஜ் செய்து தரப்படும்**





DISH SERVICE AND REPAIRS

**SATELLITE RECEIVERS SALES INSTALLATION, SERVICE & RECHARGE**

**TV Brackets, TV antennas Cable TV Accessories & dth receivers Repair**

SUN DIRECT
dishtv
airtel digital TV
d2h
TATA Sky
BIGTV DTH SERVICE




**No.64, 1st Floor, Bus Stand Complex, Vavuniya.**
**E-mail: newlankasat@ymail.com www.lankasatsystems.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WES உலக நாடுகளுக்கான துரித பொதி சேவை!

# WORLD EXPRESS SERVICE

**International & local Courier Service**

No.180/5, Station Road, Vairavapuliyankulam, Vavuniya. Tel : 024 4903 200

WORLD EXPRESS IN சிறப்பு விலைச்சலுகைகள்

துரித கதியில் குறைந்த செலவில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பொருட்களை அனுப்பிடலாம்.




- உங்களின் பொதிகளை துரிதமாக உங்கள் வீட்டில் இருந்தவாறே பெற்றிடலாம்
- எந்தவொரு நாட்டிலும் உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு 03 அல்லது 04வேலை நாட்களுக்குள் பொதிகளை ஒப்படைத்தல்
- 10 கிலோவிற்கு மேற்பட்ட பொருட்களிற்கு விசேட விலைக்கழிவுகள்.

Head Office : 011 2520 894
Negambo : 031 2224 544
Kotahena : 011 4574 586
Jaffna : 021 2220 356
Betticalloa : 065 2228 995
Mannar : 023 4924 031

**Hotline**
0773 870 952,
0114 345 966

E-mail: worldexpress.sre@email.com www.worldexpressservices.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org